Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 10

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி - 07 | 23 - 07 - 2003 | புதன்கிழமை | ஓசை 155

பட்சுருள்கள் அனைத்தையும் கனினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கனினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
அனைத்திற்கும்

Jaffna Road, Kilinochchi.
யாழ் சாலை, (சி-8437) கிளிநொச்சி.

# நோர்வே விசேட தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்திப்பு

## பேச்சுக்கள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்படவில்லை

(கிளிநொச்சி)

**நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இப் பேச்சுவார்த்தை தொடர்பான விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.**

காலை 8.30 மணியளவில் உலங்குவானூர்தியில் கிளிநொச்சி பொது மைதானத்தில் வந்து இறங்கிய அவர் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் சந்திப்பை மேற்கொண்டிருந்தார்.

9.15 மணி முதல் 11.10 மணி வரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்புப் பற்றி ஜோன் வெஸ்பேர்க்கிடம் ஊடகவியலாளர் கேட்டபோது பொதுவான விடயங்கள் பேசப்பட்டதாகக் கூறினார். மேலதிக விபரங்கள் எதனையும் தெரிவிக்க அவர் மறுத்து விட்டார்.

இதேவேளை, வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபை வரைவு தொடர்பாகவும், வேறு சில விடயங்கள் பற்றியும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சிறிலங்கா அரசின் இந்த வரைவினை கடந்த வியாழக்கிழமை ஜோன் வெஸ்பேர்க் புலிகளிடம் கையளித்திருந்தார். புதிய

(10ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்ட நோர்வேப் பிரதிநிதிகள்

# கைது செய்ய உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பெண் இராணுவச் சிப்பாயின் மரணம் தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை மீண்டும் கைது செய்து காவலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் பொலிசாருக்கு நேற்று உத்தரவிட்டுள்ளார்.

2001ஆம் ஆண்டு நடுப்பகுதியில்

(10ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு.-அம்பாறை மாவட்டங்களில் நேற்று 2ஆவது நாளாக ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மக்கள் பெருமன்றத்தின் அழைப்பில் மட்டு. அம்பாறை மாவட்டங்களிலுள்ள தமிழர் பிரதேசங்களில் நேற்று இரண்டாவது நாளாக ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால், நேற்றும் தமிழர் பிரதேசங்கள் முழுமையாக செயலிழந்து காணப்பட்டதுடன் ஓட்டமாவடி முஸ்லிம் பிரதேச கடைகளும் மூடப்பட்டிருந்தன. பாடசாலை, தொழில் நுட்பக் கல்லூரி, அரசாங்கத் திணைக்களங்கள் இயங்கவில்லை.

வீதிகளிலே ரயர்கள் போடப்பட்டு எரியூட்டப்பட்டன. அத்தோடு, ஆங்காங்கே முட்கம்பிகளும் காணப்பட்டன. அண்மைக்காலமாக மட்டு., அம்பாறை மாவட்டங்களில் இடம்பெற்றுவரும் படையினரின் அத்து

(10ஆம் பக்கம் பார்க்க)

## 4 சிப்பாய்கள் காயம்

அரியாலையில் சிறிலங்காப் படைச்சிப்பாய் ஒருவரின் கைக்குண்டு நேற்று முன்தினம் தவறுதலாக வெடித்ததில் 04 படையினர் காயமடைந்துள்ளனர்.

## ஹர்த்தாலைக் குழப்பும் நோக்குடன்

# படையினரும் ஈ.பி.டி.பியும் பொதுமக்கள் மீது தாக்குதல்

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் கடந்த இருதினங்கள் படையினரின் கெடுபிடிகளைக் கண்டித்து பொதுமக்களால் நடாத்தப்பட்ட ஹர்த்தால் வெற்றியளித்த போதும் மேற்படி ஹர்த்தாலை குழப்புவதற்காக படையினர் வர்த்தக நிலையங்களைத் திறக்குமாறு வற்புறுத்தியதுடன் மாவட்டங்களில் பல இடங்களிலும் பிரதான வீதியால் இரண்டு பேருக்கு மேல் சேர்ந்து குழுவாக பொதுமக்கள் செல்வதற்கு படையினர் அனுமதிக்கவில்லை. அவ்வாறு குழுவாகச் சென்றவர்கள் மீது பெரும்பாலான இடங்களில் தாக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவச் சீருடையை ஒத்த உடையணிந்த சிறுவன் மீது தாக்கு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வந்தாறுமூலையில் கடையில் விற்பனையாகும் இராணுவ சீருடையை ஒத்த உடை அணிந்து வந்த 11 வயதுச் சிறுவன் வந்தாறுமூலை மாவடிவேம்பு முகாம் படையினரால் தடிகளினாலும், கைகளாலும் தாக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது; நேற்று முப 11 மணியளவில் கடந்த சித்திரை

(10ஆம் பக்கம் பார்க்க)

# வவு. சமளங்குளம் பாடசாலை ஆசிரியர்களை மிரட்டிய இராணுவம்

வவுனியா சமளங்குளம் பாடசாலையை நேற்றுக்காலை பொலிசாரும், இராணுவத்தினரும் சுற்றிவளைத்துள்ளனர். அத்துடன், காலை அங்கு முதல் முதலாகச் சென்று ஆசிரியர்களை விசாரித்து மிரட்டியுள்ளனர்.

இப்பாடசாலைக்கு புலிகள் அடிக்கடி வருகை தருவதாகவும்,

(10ஆம் பக்கம் பார்க்க)

# வாழைச்சேனை பொலிஸ் நிலையம் முன் கண்காணிப்புக் குழுவிற்கு கல் வீச்சு

## வாகனத்தின் கண்ணாடி உடைந்தது

(மட்டக்களப்பு)

வாழைச்சேனைப் பொலிஸ் நிலையம் முன்பாக நேற்று முன் தினம் இரவு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றவேளை அவ்விடத்திற்குச் சென்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வாகனம் தாக்கப்பட்டுள்ளது. இதனால் வாகனத்தின் கண்ணாடி உடைந்தது. எனினும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

கும்புறுமுனை படை முகாமிலுள்ள சிறிலங்காப் படையினரால் பொதுமக்கள் தாக்கப்பட்டமைக்கு ஆட்சேபனை தெரிவித்தும் அந்தப் படையினருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரியுமே

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலையில் நடைபெறவிருந்த

# 55 பாடசாலைகள் கையளிப்பு நிகழ்வு மாணவர்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த ஜி.ரி.சற் நிறுவனத்தால் புனரமைப்புச் செய்யப்பட்ட 55 பாடசாலைகளின் கையளிப்பு வைபவம் மாணவர்களின் கடும் எதிர்ப்புக் காரணமாக கைவிடப்பட்டது.

இந்த வைபவத்தில் கலந்து கொள்ளவந்த சிறிலங்கா புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன பல்கலைக்கழக மாணவர்களால் திருப்பி அனுப்பப்பட்டார்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, யாழ். குடாநாட்டில் ஜி.ரி. சற் நிறுவனத்தால் புனரமைப்புச் செய்யப்பட்ட 55 பாடசாலைகளின் கைளிப்பு வைபவத்திற்கு பிரதம விருந்தினராக வருகை தந்தபோதே வாயிலில் குழுமி நின்ற மாணவர்கள் அமைச்சரைத் திருப்பி அனுப்பியுள்ளனர். இதனைத் தொடர்ந்து திட்டமிட்ட நிகழ்வை ஏற்பாடுகள் செய்யப்பட்டபோது ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி வேல்ட்டன்

(10ஆம் பக்கம் பார்க்க)



அமைச்சர் ஜயலத்தின் வாகனத்தைச் சூழ்ந்து நிற்கும் மாணவர்கள்

# கண்ணிவெடியில் சிக்கி யானை படுகாயம்

## சிகிச்சையளிக்க தென்னிலங்கை மருத்துவர் வருகை



அம்பகாமம் காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் புதைத்து விட்டுச் சென்ற கண்ணிவெடியில் சிக்கி யானை ஒன்று காலில் படுகாயமடைந்தது.

கடந்த ஒரு வாரகாலமாக காயமடைந்த நிலையில் நிர்க்கதியாக தவித்துக் கொண்டிருந்த யானையை அவதானித்த வனவள பாதுகாப்புப் பிரிவினர் அவ்விடத்துக்கு விரைந்து யானையின் அவல நிலையைப் பார்வையிட்டு அதனைப் பாதுகாக்கும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள **Pantiyam 1 Computer, Pantiyam 4 Computer,** பிரிண்டருடன் **OSAKI VCD PLAYER HONDA 1000kg** சூக்கேஸ் இஞ்சின் விற்பனைக்குண்டு. தங்கமாளிகை, ஈழநாதம் பணிமனை அருகாமை, யாழ்சாலை, கிளிநொச்சி. (3566)

### தவறிவிட்டது

குணநாயகம் மயூரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை பளையில் இருந்து கிளிநொச்சிக்கு மோட்டார் சைக்கிளில் செல்லும் போது தவறிவிட்டது. இதைக்கண்டெடுத்தவர் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (3568)

## முன்பள்ளி விளையாட்டு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் முல்லை. மக்கள் நலன் புரிச் சங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் முல்லைத்தீவு கள்ளப்பாடு முகிலன் சிறுவர் பகல் நேர பராமரிப்பு முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த 17ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

கள்ளப்பாடு சமூக பொருளாதர அபிவிருத்திக் குழுத் தலைவர் க.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி சிறப்புரையினை கள்ளப்பாடு கிராம அலுவலர் இ. சேந்தன், முல்லை. மக்கள் நலன் புரிச் சங்க இணைப்பாளர் செ. நகுலசீலன் ஆகியோர் நிகழ்த்தினர். (ஆ)

# பரிசளிப்பு நிகழ்வும் பணிமனைத் திறப்பு விழாவும்

கிளி/திருநெறிக்கழகம், கிளி/மாவட்டப் பாடசாலை மட்டத்தில் தரம் 6 மாணவர் மத்தியில் சைவ நெறிப் போட்டிப் பரீட்சை ஒன்றை நடாத்தியது. கூடிய புள்ளி பெற்ற மாணவருக்கு கடந்த 20 ஆம் திகதி கழகப் பணிமனைத் திறப்பு விழாவில் பதக்கமும் பரிசில்களும் வழங்கிக் கௌரவித்தது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், பிரதேச செயலாளர் பொன். நித்தியானந்தம் ஆகியோர் வருகை தந்து சிறப்பித்தனர். மாணவி செல்வி கிருபாலினி சிவானந்தத்திற்கு கல்விப் பணிப்பாளர் பதக்கம் அணிவித்துப் பாராட்டினார். பொன். நித்தியானந்தம் பணிமனையைத்திறந்து வைத்து கழகப் பணிகளைப் பாராட்டி உரையாற்றினார். திவத்திரு சணேசானந்தா மகாதேவா சுவாமிகள், நிகழ்வுக்கு ஆசியுரை வழங்கினார். கழகப் பத்திரிகையான 'திருநெறி' பத்திரிகையின் முதல் பிரதியை கிளி/செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி பெற்றுக்கொள்ள சிறப்புப்பிரதியை திருலோக மூர்த்தி பெற்றுக்கொண்டு சிறப்பித்தார். ஏராளமான மாணவரும் கழக உறுப்பினரும் கலந்து கொண்ட இந்நிகழ்வு கிளிநொச்சியில் சமயம் வளர்த்த பெரியார்களின் பட ஊர்வலத்துடன் ஆரம்பமாகியது.

### சிறிலங்கா கடற்படையினரின்

# கெடுபிடி குறித்து கடற்றொழிலாளர் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு

யாழ். குடாநாட்டு கரையோரங்களில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா கடற்படையினர் கடற்றொழிலாளர்கள் மீது தொடர்ந்து கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக குடாநாட்டு கடற்றொழிலாளர் சங்கச் சமாசம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றை நேற்று அனுப்பிவைத்துள்ளது.

படையினரது கெடுபிடிகள் நிறுத்தப்படாதுவிட்டால் தாம் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக சமாசம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## 03 நாள் நினைவஞ்சலியும், அழைப்பிதழும்



பிறப்பு 10.06.1934

இறப்பு 19.07.2003

### அமரர் பொன்னையா சுப்பிரமணியம்

விளக்குவைத்தகுளம் ஓமந்தையைச் சேர்ந்த பொன்னையா சுப்பிரமணியம் அவர்களின் 03ஆம் நாள் நினைவஞ்சலி இன்று 23.07.2003 அவரது தற்காலிக இல்லமாகிய நடேசய்யான் வீட்டுத் திட்டம், தேவிபுரத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் உற்றார், உறவினர், போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: திருமதி சு. செல்லம்மா (மனைவி), சு.மகேந்திரன் (மகன்), சு.யோகரத்தினம் (மகன்), சு.குகனேஸ்வரி (மகள்), சு.இராசேந்திரம் (மகன்), சு.தவமலர் (மதுவிழி - போராளி - மகள் - பாடகி), சு.ஜெயக்குமார் (போராளி - மகன்), சு.சுவேந்திரன் (கலைஞன்), சு.மதுவிழி (மாவீரர்), சு.யோகேஸ்வரி (ஆயம் - புளியங்குளம் தடைமுகாம்).

**நிதர்சனா நிறுவனப் போராளிகள், பணியாளர்கள்.**

(3573)

# வெளிநாடுகளுக்கு ஆட்களைக் கடத்தும் மத்திய தளமாக சிறிலங்கா மாறுகிறது!

### சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகம்

சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்புவதுடன் சம்பந்தப்பட்ட சூத்திரதாரிகளை பொலிசார் தென்பகுதியில் தேடிவருகின்றனர்.

ஒரேவாரத்தில் தெற்கிலும் மலையகத்திலும் சட்டவிரோதமான வழியில் செல்வதற்கு காத்திருந்த 232 வெளிநாட்டவர் கைது செய்யப்பட்டதையடுத்து ஆட்கடத்தலில் ஈடுபடுவோரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு ஒரே வாரத்தில் இரு குழுக்கள் கைது செய்யப்பட்டிருப்பதால் சட்டவிரோதமாக ஆட்களை கடத்தும் மத்தியதளமாக சிறிலங்கா மாறிவருகிறதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

இவ்வாறு இத்தாலி செல்வதற்கு சிறிலங்காவுக்கு அழைத்துவரப்பட்ட 195 இந்தியர்களும் 282 பாகிஸ்தானியர்களும் 21 பங்களாதேஷ் வாசிகளும் அழைத்துவரபபட்டு தென் பகுதியிலும் கண்டியிலும் தங்கவைக்கப்பட்டிருந்த வேளை கைதாகினார்.

இவ்வாறு கைதாகியோரிடம் இத்தாலிக்கு அனுப்புவதற்காக மூன்று இலட்சம் ரூபா முதல் ஆறு இலட்சம் ரூபா வரை பெறப்பட்டுள்ளது.

### பகல் வேளையில் வீதியில் வைத்து

# பாலியல் வல்லுறவு முயற்சியிலீடுபட்ட இராணுவ கோப்ரல் கைது

பட்டப்பகலில் பல பேர் முன்னிலையில் 19 வயது யுவதியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்த இராணுவக் கோப்ரல் ஒருவர் பொது மக்களின் உதவியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை மாவட்ட வைத்திய சாலைக்கு முன்னால் நடைபெற்ற இச்சம்பவத்தில் மேற்படி சிப்பாய் பாலியல் வல்லுறவுக்கு முயன்ற வேளை கூடி நின்ற பொதுமக்கள் யுவதியை விடுவித்து சந்தேக நபரை நையப்புடைத்து பொலிசில் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணையின்போது மேற்படி நபர் வடபகுதி இராணுவ முகாமில் கடமையாற்றுபவர் எனவும் மேற்படி பெண் தாம் விரும்பும் பெண்ணைப் போன்றவராக இருந்ததால் இவ்வாறு நடந்து கொண்டதாகவும் தெரிவித் துள்ளார்.

விசார ணைகளை மேற்கொண்ட பதுளை மாவட்ட நீதிபதி அவரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை காவலில் வைக் குமாறும் மனநோய் வைத்தியரிடம் காட்டுமாறும் பணித்துள்ளார்.

# பெண் வைத்தியருக்கெதிராக அமைச்சர் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

மாரவில அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் வைத்தியரான நிசாந்தி ரணசிங்க என்பவருக்கு ஒரு வருடத்துக்கு முதல் வழங்கப்பட்ட 40 ஆயிரம் ரூபா பணத்தையும் ஒரு கைக்கடிகாரத்தையும் தம்மிடம் மீள ஒப்படைக்குமாறு கேட்டு அமைச்சர் ஒருவரால் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் ராஜுத் போகொல்லாகமவினால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, 2002 ம் ஆண்டில் தம்மாலும் மனைவியாலும் விரும்பப்பட்ட மேற்படி வைத்தியப் பெண்ணிடம் வைத்திருந்த நம்பிக்கை காரணமாகவும், வைத்தியர் என்ற வகையிலும் அவரை நம்பி அவருக்கான புத்தகங்கள், உபகரணங்கள் வாங்கக் காசு தேவைப்பட்டதால் மீளளிக்கும் உடன்பாட்டின்படி 40 ஆயிரம் ரூபா காசும் ஒரு கைக்கடிகாரத்தையும் வழங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும் அவர் குறிப்பிட்ட தவணையில் மீளளிக்கவில்லை எனவும் இதனைப் பெற்றுக்கொள்ளவே நீதிமன்றத்தின் உதவியை நாடியிருப்பதாகவும் அமைச்சர் போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

## அலுவலகம் அமைக்க நிதி

முல்லைத்தீவு மாவட்ட தபால் அத்தியட்சகர் அலுவலகமும், விடுதியும் முல்லைத்தீவில் அமைப்பதற்காக 2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் வெகுவிரைவில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டு ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்படுவார்கள் என அரச அதிபர் தெரிவித்துள்ளார். (20)

## இன்று முதல் வேலை நிறுத்தம்

இலங்கை பல்கலைக் கழகங்களின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் சங்கம் நான்கு அம்சக் கோரிக்கையை முன்வைத்து வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளது. இன்று முதல் இப்போராட்டம் நடைபெறுவதாக சங்கம் அறிவித்துள்ளது. இப்போராட்டத்தில் நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக் கழகங்களின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் ஈடுபடவுள்ளனர்.

## சிலிப்பர் கட்டைகள் நீக்கம்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனைக்கும்-கிரானுக்குமிடையில் 20ஆவது மைல்கல்லில் ரயில் பாதையிலுள்ள சிலிப்பர்க்கட்டைகளும் தண்டவாளங்களும் இனந்தெரியாதோரால் அகற்றப்பட்டுள்ளன. கடந்த சனிக்கிழமை கும்புறுமுனை படைமுகாமிற்கருகில் இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பாக சிறிலங்கா பொலிசாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

இம் மாதம் 3ஆம் திகதியும் இதேபோன்று சிலிப்பர் கட்டைகள் அகற்றப்பட்டதால் மட்டக்களப்பிற்கும் கொழும்பிற்குமிடையிலான தொடருந்து சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இப்புகையிரத சேவை இரண்டு முறைகள் ஆரம்பமாகியும் புகையிரதம் தடம் புரண்டதால் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வாழ்த்துக்கள்

வடக்கு-கிழக்கு மாகாணமட்ட மெய்வல்லுனர் போட்டியில் கிளி/அக்கராயன் மகாவித்தியாலயத்தில் இருந்து பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களான செல்வி சீ.தாரணி 15 வயதுப் பெண்கள் பிரிவில் குண்டு தள்ளுதல், ஈட்டி எறிதல், தட்டு எறிதல் ஆகிய மூன்றிலும் 1ஆம் இடத்தினைப் பெற்றுச் சிறந்த வீராங்கனையாகவும்,

செல்வன் இ.கெங்காநேசன் 21 வயது ஆண்கள் பிரிவில் 5000 மீற்றர் ஓட்டத்தில் 2ஆம் இடத்தினையும், செல்வி த.சர்மிளா 21 வயதுப் பெண்கள் பிரிவில் நீளம் பாய்தலில் 3ஆம் இடத்தையும், 200 மீற்றர் ஓட்டத்தில் 3ஆம் இடத்தையும் பெற்று வெற்றியீட்டியமைக்கும் மேலும் வெற்றிகளைப் பெற வேண்டும் எனவும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**கிளி/அக்கராயன் மகாவித்தியாலயம்,**
**ஆசிரியர் நலன் ஒன்றியம்.**

(3571)

## சாவு அறிவித்தல்

### திரு கந்தையா-பொன்னம்பலம்

சரசாலை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் உயிலங்குளம் துணுக்காயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னம்பலம் அவர்கள் 20 – 07 – 2003 (ஞாயிற்றுக்கிழமை) அகால மரணமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், அரியமலரின் அன்புக் கணவரும், அருட்குமரன் (கனடா), உஷாகரன் (லண்டன்), சிவாகரன், சிறிகரன், காயத்திரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கனகரத்தினம், மார்க்கண்டு, கந்தசாமி, கனகம்மா,பரமேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயலட்சுமி, சிவராசா ஆகியோரின் மைத்துனரும், சுஜாத்தா (லண்டன்), மயூரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் யதுர்ஷன், சதுர்ஷன் ஆகியோரின் பேரனுமாவார். இறுதிக்கிரியை 24.07.2003 நாளை வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**உயிலங்குளம், துணுக்காய்.**

**தகவல்:- சிறிகரன்(மகன்)**

(3570)

# காஷ்மீரில் இந்தியப் படைமுகாம் மீது அதிரடி; ஏழு படையினர் பலி; ஆறு பேர் படுகாயம்!

(புதுடில்லி)

**ஜம்மு-காஷ்மீர் அக்மோர் பகுதியைச் சேர்ந்த டண்டார் எனுமிடத்தில் இராணுவ முகாம் மீது இரண்டு தற்கொலைப் படையினர் நடத்திய தாக்குதலில் 07 இந்தியப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 06 பேர் காயமடைந்துள்ளனர்.**

இதனையடுத்துத் தொடர்ந்த துப்பாக்கி மோதலில் 02 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. அதிகாலை 5 மணிக்கு இராணுவச் சீருடையில் வந்த 02 தற்கொலைக் குண்டுதாரிகள் வாகனத்திலிருந்து இறங்கியதுமே, பாதுகாப்புப் படையினரை நோக்கிச் சரமாரியாகச் சுடத் தொடங்கினர். அத்துடன் கைக்குண்டுகளையும் வீசியபடியும முகாமினுள் நுழைய முற்பட்டனர்.

காலாற்படை, பீரங்கிப் படையினர் உள்ள இந்த டண்டார் இராணுவ முகாமிலுள்ள ஏரான வெடிமருந்துப பொருட்களையழிப்பதே தீவிரவாதிகளின் நோக்கம் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்தத் தாக்குதலில் எவ்வளவு தீவிரவாதிகள் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பது இன்னமும் தெரியவரவில்லை.

தீவிரவாதிகளைத் தேடும் பணி தொடர்வதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனைத் தொடர்ந்து ஜம்முவில் இருந்து பிகர்கான் வரையிலான 300 கிலோ மீற்றர் நீளச் சாலை முழுவதும் கடும் பாதுகாப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய காவல்துறைப் படை, எல்லை பாதுகாப்புப் படை, மாநிலகாவல்துறை ஆகியவற்றைச் சேர்ந்த சிறப்புப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.


காஷ்மீரில் இதே பாணியிலான தாக்குதல்கள் தீவிரவாதிகளால் நடத்தப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

## வெள்ள அபாயம்!

(மணிலா)

பிலிப்பைன்ஸில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்து வருவதால் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது

இப்பகுதிகளில் 82 மில்லியன மக்கள் வசிக்கின்றனர். புயற்காற்று ஓிரு தினங்களுக்கு நீடிக்கும் என்று அஞ்சப்படுகிறது.



பாக்தாத்தில் போராளிகளின் தாக்குதலுக்குள்ளான வாகனத்தைக் கடந்து செல்லும் அமெரிக்க இராணுவம்


## யாத்திரிகர்கள் மீது தாக்குதல் ஏழு பேர் உயிரிழப்பு; 42 பேர் காயம்!

(புதுடில்லி)


ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஹத்ரோ அருகே பாக்காங்கா எனுமிடத்தில் அமர்நாத் யாத்திரிகர்கள் மீது தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய குண்டு வீச்சுத தாக்குதலில் 07 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 42 பேர் காயமடைந்துள்ளனர்.

வைஷ்ணூர் தேவி ஆலயத்திற்குச் சென்று கொண்டிருந்த மற்றும் திரும்பிக்கொண்டிருந்த யாத்திரிகர்கள் உணவுக்காகப் பொது சமையல் கூடத்தில் கூடியிருந்த போது இந்தத் தாக்குதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்திய-பாகிஸ்தான் சமாதானத்தின் முன்னேற்றத்தைச் சீர்குலைக்கும் நோக்கில் இத்தாக்குதல்கள் நடைபெற்றுள்ளதாக. இச்சம்பவ இடத்திற்கு விரைந்துள்ள மத்திய உள்துறை இணையமைச்சர் சாமி சின்னியானந்தும், ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சர் முப்தி முகம்மது சயித்தும் கூறியுள்ளனர்.



லைபீரியாவில் நடைபெற்ற மோதலில் காயப்பட்ட ஒருவர் மொன்ரோவியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



மொன்ரோவியா மைதானத்திற்கு முன்னால் சிறிய இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகள்

## கொரிய அணுவாயுதத் திட்ட சர்ச்சைக்கு இராஜதந்திர தீர்வைக் காண அழைப்பு

(வாஷிங்டன்)

வடகொரியாவின் சந்தேகத்துக்கு இடமான அணுவாயுதத் திட்டங்களின் சர்ச்சைக்கு இராஜதந்திரத் தீர்வுகளையே விரும்புவதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் கூறியிருக்கிறார்.

சீனா,தென்கொரியா என்பன தம்முடன் கூட்டாக இணைந்து ஒரே குரலில் வடகொரியாவை வலியுறுத்த வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கான முத்தரப்புப் பேச்சுவார்த்தைகள் செப்ரெம்பர் ஆறாம் திகதி சீனத் தலைநகரில் இடம்பெறலாம் என்ற தகவல் தொடர்பாக அமெரிக்க அதிகாரிகள் கருத்துக் கூற மறுத்துவிட்டார்கள்.

## மேற்காபிரிக்க நாடுகளை முதலில் தலையிட வேண்டுகை

மேற்காபிரிக்க நாடுகள் முதலில் லைபீரியாவுக்குச் செல்ல வேண்டுமென அமெரிக்கா கூறுகிறது.

மேற்காபிரிக்க நாடுகளின் பிராந்தியத் தாபனமான ஒக்கோவோட் தற்போது நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரம் உருவாகியுள்ளது என அமெரிக்க வெளிவிவகார அமைச்சு அறிக்கை விடுத்துள்ளது.

லைபீரிய சனாதிபதி சாள்ஸ் ரெயிலரைப் பதவி கவிழ்க்கப் போராடும் கிளர்ச்சிக் குழு நேற்று மொன்ரோவியாவின் மீது கடுமையான [illegible] தாக்குதலை மேற்கொண்டி[illegible]றது.இதனால் 60 பேரள[illegible] கொல்லப்பட்டிருக்கலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

## காஸ்ரோ குறித்த வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி; பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றார்

(கவானா)

கியூபா சனாதிபதி பிடல் காஸ்ரோ தமது உடல் நலம் குறித்துப் பரவிய வதந்திகளுக்கு, முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டுள்ளார்.

கியூபா நாட்டில் 1959 ஆம் ஆண்டு வெடித்த இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து பிடல் காஸ்ரோ சனாதிபதியாகப் பதவி வகிக்கின்றார். பிடல்காஸ்ரோவிற்குத் தற்போது 76 வயதாகின்றது.

உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அவரால் இனி நடமாட முடியாது என்றும் வதந்திகள் பரவின.

இந்த வதந்திகளுக்கு அரச தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படாத நிலையில் பிடல் காஸ்ரோ உடல்நிலை பற்றிய மர்மம் நடித்து வந்தது.

இந்நிலையில் தலைநகர் கவானாவில் நேற்று முன்தினம் நடந்த பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு சனாதிபதி பிடல் காஸ்ரோ உரையாற்றியுள்ளார்.

## அமெரிக்கத் தூதரகம் மீது எறிகணைத் தாக்குதல்

(மொன்ரோவியா)

லைபீரியத் தலைநகர் மொன்ரோவியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது எறிகணைத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இத்தாக்குதலில் உயிரிழப்புக்கள் எவையும் ஏற்படவில்லை. ஏவப்பட்ட எறிகணை ஒன்று தூதரகத்திற்குள் இருந்த களஞ்சியத்தின் மீது வீழ்ந்து வெடித்துள்ளது. இதனால் களஞ்சியத்தின் கூரை சேதமடைந்துள்ளது.

இத்தாக்குதலில் இத்தூதரகத்தில் பணியாற்றிய லைபீரியப் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் படுகாயமடைந்துள்ளார்.

## பணி நீக்கப்பட்ட அரச ஊழியர் விடயத்தை அரசு ஆராயும்!

(சென்னை)

பணி நீக்கம் செய்யப்பட்ட தமிழக அரச ஊழியர்களை நிபந்தனை அடிப்படையில் திரும்பவும் பணியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ள யோசனையை விவாதிப்பதற்காகத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா உயர் நிலைக் கூட்டமொன்றைக் கூட்டவுள்ளார்.

ஊழியர்களை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்வது பற்றி இக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என அரச வட்டாரங்கள் கூறியுள்ளன.

## சீனாவில் நிலநடுக்கம்

(பெய்ஜிங்)

தென்மேற்கு சீனாவில் யூனான் மாகாணத்தில் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் குறைந்தது 09 பேர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக் கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

6.2 றிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 800 க்கும் மேற்பட்ட வீடுகள் அழிந்து போயுள்ளன.



சண்டை நடைபெறும் லைபீரியாவின மொன்ரோவியா நகர வைத்தியசாலையில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டும் மந்த போசணையால் உருக்குலைந்தும் போன ஒரு வயதுக் குழந்தை.

### -காவிரி நீர் பங்கீட்டுக்காக-

## தமிழக விவசாயிகள் குழுவினர் ஆகஸ்டில் கர்நாடகா பயணம்

(சென்னை)

காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினைக்குப் பரஸ்பரம் புரிந்து கொண்டு நடுவர் மன்ற வழிகாட்டலின்படி தீர்வுகாணும் முயற்சியாகத் தமிழ் நாட்டின் விவசாயிகள் குழு அடுத்த மாதம் கர்நாடக மாநிலத்திற்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

அடுத்த மாதம் 24 ஆம் திகதி முதல் 03 நாட்களுக்கு மேற்கொள்ளப்படவுள்ள இப்பயணத்திற்குப் பின்னர், கல்லணை முதல் மேட்டுக்கரை கர்நாடக விவசாயிகள் குழு பார்வையிடவுள்ளது.

தமிழ்நாட்டு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலகர் துரை மாணிக்கம் வெளியீட்டு அறிக்கையில் இதனைக் கூறியுள்ளார்.

# விகிதாசாரத் தேர்தல் முறையில் எத்தகைய மாற்றம் கொண்டு வரப்படும்?

தற்போதுள்ள விகிதாசாரத் தேர்தல் முறையை மாற்றுவதற்கு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பாகப் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமித்து அதற்குத் தலைவராக மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனவை நியமிக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

1978 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தில் இந்தத் தேர்தல் முறை கொண்டுவரப்பட்டது. 1970 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 17 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மட்டுமே பாராளுமன்றம் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோதும் அப்போது ஆட்சிப்பீடமேறிய மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பெற்ற மொத்த வாக்குகளுடன் ஒப்பிடுகையில் குறைந்தளவு வித்தியாசத்திலேயே வாக்குகளைப் பெற்றிருந்தது.

இந்த அனுபவத்தினதும் முன்னைய தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற வாக்குகளின் அடிப்படையிலும் எதிர்க்கட்சிக்குச் சென்றாலும் கணிசமான பாராளுமன்ற உறுப்பினர்களின் பலத்துடன் ஐக்கியதேசியக் கட்சி செல்ல வேண்டுமென்ற நோக்கத்துடன் இத்தேர்தல் முறை உருவாக்கப்பட்டது.

இத்தேர்தல் முறை இவ்வாறான ஒரு விளைவைக் காட்டிய போதும் அதனால் ஏற்பட்ட பக்கவிளைவுகள் சிறிலங்காவின் பிரதான கட்சிகள் இரண்டையுமே பல வகைகளில் பாதித்தன. முதலாவதாக ஆளும் கட்சிகள் போதியளவு பலத்துடன் ஆட்சிப் பீடம் ஏற முடியாத நிலை. இதனால் பாராளுமன்றத்தில் சாதாரண சட்டங்களை நிறைவேற்றக் கூட ஏனைய கட்சிகளின் தயவை நாட வேண்டியிருந்தது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி பதவியைக் கொண்டு ஆட்சியைக் நடத்த முடிந்தாலும் பாராளுமன்றம் சட்டவாக்க அதிகாரத்தையும் வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரிக்கும் அதிகாரத்தையும் கொண்டிருந்தால் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி சிறுபான்மைக் கட்சிகளின் அல்லது ஏனைய சிறு கட்சிகளின் தயவை நாடவேண்டியிருந்தது. அவசரகால சட்டத்தை நிறைவேற்றும் விடயத்தில் கூட ஆதரவாக வாக்களிக்காவிடினும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாது ஏதாவது சில கட்சிகள் தவிர்த்துக்கொண்டால் மட்டுமே சாத்தியமாயிற்று.

குறிப்பாகச் சிங்கள இனவாதிகளைப் பொறுத்துப் பாராளுமன்றத்தில் தமிழ் முஸ்லிம் கட்சிகளின் தயவிலேயே சிங்கள ஆளும் கட்சிகள் தங்கியிருக்க வேண்டி வந்தமை பெரும் சினத்துக்குரியதொன்றாக இருந்தது. அடுத்ததாக அரசியலமைப்பில் திருத்தம் ஏதாவது மேற்கொள்ள முடியாதவாறு எந்தவொரு கட்சியும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற முடியாத நிலையை இத்தேர்தல் முறை ஏற்படுத்தியது.

இதேவேளை, இத்தேர்தல் முறையில் கட்சிகள் சந்தித்த மிகவும் பாதகமான விளைவு விருப்புவாக்குத் தெரிவுமுறையால் ஏற்பட்டதாகும். இந்தமுறை இல்லாவிட்டால் கட்சியில் தேர்தலில் போட்டியிடுபவர்கள் தீவிரமாகப் பிரச்சாரத்தில் ஈடுபடாது போக வாய்ப்பு உள்ள அதேவேளை, கட்சி உறுப்பினர்களிடையே பிளவையும் போட்டியையும் ஏற்படுத்தும் ஒன்றாக இது அமைந்துள்ளது. இது சாதாரண அங்கத்தவர்களிடையே மட்டுமல்ல உயர்மட்டத்திலேயே பிளவுகளை ஏற்படுத்தியது. உதாரணமாகப் பொதுசன ஐக்கிய முன்னணிப் பொதுச் செயலாளர் தி.மு.ஜெயரட்ணவுக்கும்,சக்திவாய்ந்த அமைச்சரான அனுருத்தரத்வத்தவுக்குமிடையே கூட ஏற்பட்டது. அதிகூடிய விருப்பு வாக்குப் பெறும் நோக்கில் கட்சி அங்கத்தவர்களிடையே வன்முறை மோதல்கள் தூண்டிவிடப்பட்டன. தேர்தல் மோசடிகளைக் கட்சிக்குள் இருந்து கொண்டே அம்பலப்படுத்தும் நிலை உருவாகியது.



அத்துடன் கூட்டணி அமைத்து தேர்தலை எதிர்கொள்ளும் வேளை இந்த நிலைமை மேலும் மோசமடைந்து தோழமைக் கட்சிகளிடையே மனக்கசப்பும், பிளவும் ஏற்பட வழி வகுத்தது.

இவ்வாறான நிலைமைகள் பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் தீவிரமாகக் காணப்பட்ட போதும் ஐக்கிய தேசியக் கட்சியிலும் இவ் வாறான போட்டிகள், பிளவுகள் இல்லாமலில்லை. எனவே தான் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தில் கட்சிக்குள்ளேயே ஏற்படும் முரண்பாடுகள் குறித்து முக்கியமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மூலம் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்கு உரியவர்களாக அல்லாது மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப் படுவதாலும் மக்கள் முக்கியமாகக் கட்சிக்கே வாக்களிப்பதாலும் பாதக நிலையே ஏற்படுகின்றது. சில தொகுதிகளைச் சார்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாக வேறு சிலவற்றிலிருந்து எவருமே தெரிவாகாத நிலை ஏற்படுகின்றது. இதனால் அவை கவனிப்பாரற்ற நிலையை அடைகின்றன. மேலும் தொகுதி மக்களுக்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதில் சொல்ல வேண்டிய கடமையும் குறைகின்றது.

ஆனால், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை மாற்றுவதால் சிறுகட்சிகள் பாதிப்படையும் வாய்ப்புக்கள் அதிகம். அதிலும் குறிப்பாக மாவட்டத்தில் பரவலாக மக்கள் ஆதரவைக் கொண்ட தொகுதி ரீதியாகப் பார்க்குமிடத்து குறைந்த ஆதரவைக் கொண்ட ஜே.வி.பி இடதுசாரிகள், தென்பகுதியில் முஸ்லிம் காங்கிரஸ் நுஆ இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையகமக்கள் முன்னணி என்பனவற்றுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் எனினும் இக்கட்சிகள் பெரும்பாலும் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதால் (ஜே.வி.பி.கூட்டுச் சேர்ந்து போட்டியிட முன்வந்துள்ளது.) குறிப்பாக இத்தனை தொகுதிகள் தமக்குவேண்டும் என பேரம்பேச இலகுவானதாக இருக்கும்.

இதேவேளை விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் இடைத்தேர்தல் ஒன்று சாத்தியமில்லாமல் உள்ளமையும் இங்கு கவனிக்கத் தக்கதாகும் இந் நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவிவெற்றிடமாகும் போது அந்த வெற்றிடத்தை நிரப்பும் போது குறிப்பிட்ட கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மாறுபட இடமுண்டு. இதனால் கூட்டணிக்கட்சிகளிடையே பிளவுகள் ஏற்படும் வாய்ப்பு உண்டு.

இவ்வாறு பல இடர்பாடுகளை விகிதாசாரப் பிரதி நிதித்துவ முறை கொடுக்கின்ற போதும் இம் முறையை முற்று முழுதாக நீக்கி பழைய தேர்தல் தொகுதி முறைக்கு சிறிலங்கா செல்லுமா? என்பதிலும் சந்தேகம்

**வேலவன்**

உண்டு. ஏனெனில் தொகுதிவாரியான தேர்தல் முறையில் 17 பா.உ.களுடன் ஐ.தே.கவும் 8 பா.உ.களுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், எதிர்க்கட்சியில் மிகவும் பலவீனநிலையில் அமரவேண்டிய நிலை 1970 ஆம் 1977ஆம் ஆண்டு தேர் தல்களில் ஏற்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக 1977இல் எதிர்க்கட்சித்தலைமைப் பதவிகூட சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு கிடைக்கவில்லை.

இதனாலேயே இரண்டும் கலந்து கலப்புத் தேர்தல் முறையொன்றைக் கொண்டு வருவது தொடர்பாக பொதுசன ஐக்கிய முன்னணி முன்னர் ஆராய்ந்தது. இதன்படி 100 பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதிவாரியாகவும் 100 பாராளுமன்ற உறுப்பினர்கள் விகிதாசார அடிப்படையிலும் 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசியப்பட்டியல் அடிப்படையிலும் தெரிவு செய்யப்படலாம் என பொதுசன ஐக்கிய முன்னணி கருதியது.

இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி கருத்தெதையும் தெரிவிக்காத போதிலும், இதற்குத் தேவையான அரசியலமைப்பு சீர்திருத்தத்தையும் சனாதிபதி முறை நீக்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகான தீர்வுத்திட்டம் என்பவற்றை அரசியலமைப்பில் ஒன்றாக கொண்டு வருவதா? தனித் தனியே கொண்டுவருவதா? என்ற இழுபறியில் எதனையுமே கொண்டுவர முடியாது போயிற்று இப்பொழுது ஐ.தே.க. தேர்தல்முறையை மாற்றியமைப்பது குறித்து மட்டும் ஆராய முன் வந்துள்ளது. இதற்கு கட்சிகளிடமிருந்து எவ்வாறான ஆதரவு கிட்டும்? எவ்வாறான தேர்தல்முறை உருவாக்கப்படும் என்பதெல்லாம் இன்று எழுந்துள்ள கேள்விகள்

இதேவேளை, தேர்தலுடன் மிகவும் நெருக்கமான 17வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தப் போவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்திருத்தச் சட்டத்தின் கீழ் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படாது இருப்பதால் தேர்தல் ஆணையாளர் ஓய்வு பெற்றுச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சுயாதீன தேர்தல் ஆணைக்குழு ஒன்று ஏற்படுத்தப் படும் வரை அவ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளதாக அரசியலமைப்புச்சட்டத்தின் இப் 17வது திருத்தம் கூறுகிறது. ஆனால் 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தேர்தல் ஆணையாளரின் பல உத்தரவுகளை மீறியவர்கள் அப்போதைய ஆளும் கட்சியினரான பொதுசன ஐக்கிய முன்னணியினரே. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னரான பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றங்கள், சிவில் அதிகாரிகளின் இடமாற்றங்கள், அரச கட்டுப்பாட்டிலுள்ள வெகுசனத் தொடர்பு ஊடகங்களைத் தவறாகப் பயன்படுத்துதல் பொலிசாரை மட்டுமல்ல ராணுவத்தினரைக் கூட தேர்தல் வன்முறைக்குப் பயன்படுத்துதல் என்பவற்றில் அக்கட்சியே அதிகம் ஈடுபட்டது.

இவ்வாறான நிலையில் 17வது திருத்தச் சட்டத்தின் கீழான சுயாதீன தேர்தல் ஆணைக்குழு, சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு என்பன செயற்படத்தொடங்கினாலும் சட்டத்தை மதிக்காத நிலையில் இவற்றால் பயன் ஏற்படுவது சந்தேகமே.

---

# புலிகளின் அடிப்படைக் குறிக்கோளில் இந்தியாவின் ஆழமான கவனம் உள்ளது!

## -முன்னாள் இந்திய தூதர் கே. டிக்ஷிற்

இறமையுள்ள தனிநாடொன்றை அமைப்பதே புலிகளின் அடிப்படைக் குறிக்கோள் இந்த விடயம் பற்றி இந்தியா ஆழமான கவனம் கொண்டுள்ளது. என்று இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவரும் இந்திய வெளியுறவு அமைச்சின் ஆலோசகருமான கே. என். டிக்ஷிற் தெரிவித்துள்ளார்.

தனியான தமிழ்த் தாயகப் பகுதியை அங்கீகரிக்கக் கூடிய ஒரு நிர்வாகத்தையே அரசாங்கத்திடமிருந்து புலிகள் எதிர்பார்க்கின்றனர். இது புலிகளின் அடிப்படைக் கோரிக்கைகளை பிரதிபலிக்கின்றது என்றும் புதுடில்லியில் ஐ.ஏ.என்.எஸ் செய்தி நிறுவனத்திற்கு அளித்த செவ்வியில் கூறினார்.

இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கு பாதகமான சில விடயங்களைக் கூட தீர்வாக கொண்டுவர நோர்வே ஆர்வம் காட்டுகிறது.

வடக்கு -கிழக்கில் தமிழ் மக்களுக்கான இறமையுள்ள தனியரசொன்றை புலிகள் அமைப்பதைத் தடுப்பதற்காக இலங்கைப் பிரச்சினையில் இந்தியா மீண்டும் தலையிடவாய்ப்புள்ளது.

2003 ஆம் ஆண்டு முதல் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு புலிகளுடன் நடத்திவரும் பேச்சுக் குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது கட்சியினரும் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர். இந்த முரண்பாடு அமைதி முயற்சியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றங்களை ரணில் விக்கிரமசிங்க அரசு தொடர்ந்து இந்தியாவுக்கு தெரியப்படுத்திவருகின்றது.

சமாதானப் பேச்சுக்களை சனாதிபதி தேர்தல் வரை நீடிக்கச் செய்வதே. ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும். சமாதானத்திற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை முன்வைத்து சனாதிபதி தேர்தலில் வெற்றிபெற அவர் எண்ணுகிறார் அவ்வாறு அவர் வெற்றி பெற்றால் சமாதான நடவடிக்கையிலிருந்து பின்வாங்கிக் கொண்டு தமிழர்களுக்கு எதிரான பிரச்சாரத்தில் அவர் ஈடுபடக்கூடும் என்றார்.

# வட்டக்கச்சிப் பிரதேச மாதர் சங்க சங்கமம்

மாதர் சங்கங்களின் சங்கம நிகழ்வானது கடந்த ஞாயிறன்று வட்டக்கச்சிப் பிரதேசத்தில் இராமநாதபுரம் மேற்கு அரசினர் வித்தியாலயத்தில் மாலை 3.00 மணிக்கு ஆரம்பமானது.

இந்நிகழ்வின் பொதுச்சுடரினை அரசியல் துறையைச் சேர்ந்த கனிவிழி ஏற்றி வைத்தார். தேசியக் கொடியினை வட்டக்கச்சிப் பிரதேச பெண்கள் மேம்பாட்டு பொறுப்பாளர் மதிவிழி ஏற்றினார். தமிழீழ தேசியத் துணைப்படை முதல் வித்தாகிய லெப்டினன்ட் தர்மாம்பாள் திருவுருவப்படத்திற்கு கிளி/மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூவிழி ஈகச்சுடரினை ஏற்றிவைத்தார். மலர் மாலையை கிளி/மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் தமிழ்மலர் ஏற்றி வைத்தார்.

அகவணக்கத்தினைத் தொடர்ந்து உறுதி உரை இடம் பெற்றது. இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவர்களின் வரவேற்பு நடனமும், பாட்டும் இடம்பெற்றது. வரவேற்புரையினை கஸ்ரோ முன்பள்ளி ஆசிரியர் கு. குமுதினி நிகழ்த்தினார். தலைமையுரையினை இ.ம.வி. ஆசிரியர் அ. கிரிதகௌரி நிகழ்த்தினார். கருத்துரையினை கிளி/மாவட்ட பெண்கள் மேம்பாட்டு தலைவி கா. தேவாம்பிகை ஆற்றினார். சிறப்புரையை தமிழ்விழி ஆற்றினார். சபையோர் கருத்துடன் நிறைவு பெற்றது.

# கொத்தணி முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டிகள்

(பூநகரி)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஒழுங்கமைப்பில் பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் பூநகரியில் உள்ள சாமிப்புலம், முட்கொம்பன் மிதுசன், நல்லூர், ஆலங்கேணி, செல்விபுரம் முன்பள்ளி களிற்கான கொத்தணி விளையாட் டுப் போட்டி சாமிப்புலம் C.S.I. முன்பள்ளியில், பிரதேச முன்பள்ளித் தலைவர் தா. கிருஷ்ணசாமி தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் கடந்த திங்களன்று பிப 2.30 மணிக்கு ஆரம்பித்து பிப. 5.30 மணியளவில் நிறைவெய்தியது.

# வெளிநாடுகளிடமிருந்து நிபந்தனைகளுடன் கடன் பெற்றால் நாடு பொறியில் விழும்!

## - அநுரா பண்டாரநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

**சிறிலங்காவுக்கு வெளிநாட்டுக் கடனாக ரூபா 45 ஆயிரம் கோடி ரூபா கிடைக்கவுள்ளமை அது பொறியொன்றுக்குள் விழும் தன்மையானது என பொ.ஐ. முன்னணி கம்பகா மாவட்ட எம்.பியான அநுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.**

ஹொரகொல்ல என்ற இடத்தில் நடைபெற்ற குழுக் கூட்டம் ஒன்றில் பேசும் போது மேலும் தெரிவித்துள் ளதாவது, மெக்சிக்கோ, ஆர்ஜென்டினா, இந்தோனேசியா போன்ற நாடுகளும் கடனைப் பெற்று அனுபவிக்கும் கஷ்டத்தை எமது நாடு அனுபவிக்கப் போகிறது. ஐ.தே.க. கொண்டு நடத்தும் ஜனநாயக விரோதத்துக்கு எதிரான அமைப்பின் மூலம் உலக நாடுகளுக்கும் முதற்படியாக வெளி நாட்டு அரசியல் வாதிகளுக்கும் எச்சரிக்கை விடுத்து அதற்கெதிராக செயற்பட உள் நாட்டு தேசிய அமைப்பொன்றை உருவாக்க வேண்டும்.

வரலாற்றில் என்றுமில்லாதவாறு தற்போதைய அரசு நாட்டின் மதிப்பையும் புகழையும் கீழ்மட்டத்துக்கு இட்டுச் செல்கிறது. எனது தந்தை, தாய், சகோதரி ஆகியோரால் கட்டி யெழுப்பப்பட்ட சர்வதேச கீர்த்தியை ஐ.தே. முன்னணி அரசு உடைத் தெறிந்து விட்டது.

இரண்டாயிரத்து ஐநூறு வருடங்கள் பழமை வாய்ந்த சரித்திர முக்கியத்தும் வாய்ந்த சீகிரியா போன்ற தளங்கள் எமது நாட்டில் காணப்படுகின்றன. சமுத்திரத்தைப் போன்ற குளங்கள் விண்ணை முட்டும் தாது கோபுரங்கள், உல்லாசப் பயணிகளை மகிழ்விக்க வீதியமைப்புக்கள் என்பன . சர்வதேச தரத்தினையுடையவை.

அவை எமது மூதாதையினர் எமக்கு விட்டுச் சென்ற சொத்துக்கள் அவற்றைப் பாதுகாப்பது எமது பொறுப்பு. இவ்வரசு இவற்றை எல்லாம் வெளிநாடுகளுக்கு விற்க முனைகிறது. இதனை அனைத்து சக்திகளும் திரண்டு தடுக்க வேண்டும். தற்போதைய அரசு இந்த வரலாற்றை மறந்துள்ளது. எமது இனத்தை சிறுபான்மை இனமாக்க இவ்வரசு முயல்கிறது. மட்டுமன்றி தமது பதவிக்காலம் வரை நன்றாக உழைத்து, உண்டு களியாட்டம் நடத்தவே பாடுபடுகிறது. எமது உயிர் இருக்கும் வரை எமது தாய்நாட்டை அழிய விடக்கூடாது.

நாட்டுக்கு 45 ஆயிரம் கோடி ரூபா கடனாக கிடைக்கப் போவதாக அரசு கூறுகிறது. இதற்காக வட்டி செலுத்த வேண்டும் மட்டுமன்றி அவர்களின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட வேண்டும். இந்த நிதியினால் நிறைவேற்றப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்கு அந்நாட்டு ஆலோசகர்களையே நியமிக்கவேண்டும். இந்தக் கடனில் பெரும்பாலான தொகை மோசடிகளிலும், ஊழல்களிலும் செலவாகும் என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது.

இந்த நாட்டின் இளைஞர், யுவதிகளுக்கு நிரந்தர வாழ்வளிக்கும் நீண்டகாலத் திட்டங்கள் எதுவும் இவ்வரசிடம் கிடையாது. அதனை ஏற்படுத்த எமக்கு ஒரு சந்தர்ப்பம் வேண்டும். எனது தாயும், தந்தையும், சகோதரியும் அவர்களுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினார்கள். இன்று தகுதிக்கும், திறமைக்கும் அன்றி அரசியலுக்கே முதலிடம் வழங்கப்படுகிறது. இது தொடர்ந்தால் 1818ஆம் ஆண்டிலும் 1848ஆம் ஆண்டிலும் நடந்த புரட்சியைப் போல் மக்கள் புரட்சியில் ஈடுபட நேரிடும்.

அன்று வெளிநாட்டவர்களுக்கெதிராகவே கலகம் நடந்தது இன்று உள்நாட்டு அரசியல் வாதிகளுக்கெதிராக நடக்கப் போகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## குடாநாடு வருகை

மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களில் ஒருவரான எஸ். செல்வக்குமரன் இன்று 23ஆம் திகதி யாழ். குடாநாட்டுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

குடாநாட்டில் தற்போதைய சமாதான சூழ்நிலையில் மனிதவுரிமைகள் பேணல் தொடர்பாகவும் மனிதவுரிமைகள் மீறப்படுவது தொடர்பாகவும் குடாநாட்டிலுள்ள உள்ளூர் அரச சார்பற்ற அமைப்புக்களுடனும் மனித நேய அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் இவர் இவ் விஜயத்தின் போது கலந்துரையாடவுள்ளார். (27)

# எரிபொருள் நிரப்பும் வேளை மோ.சை.தீப்பிடித்து அழிவு!

(யாழ்ப்பாணம்)

கட்டுடை மானிப்பாய் வீதியிலுள்ள எரிபொருள் விற்பனை நிலையமொன்றில் கடந்த திங்களன்று மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருள் நிரப்பிய போது திடீரெனத் தீப்பிடித்ததினால் மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

இயங்கும் நிலையில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு பெற்றோல் நிரப்பிய போதே இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் சீரணி சண்டிலிப்பாயைச் சேர்ந்த எஸ். முருகதாஸ் என்பவருடைய லான்சர் மொடல் மோட்டார் சைக்கிளே எரிந்து நாசமாகியுள்ளது.

# சுற்றுலாவைக் கைவிட்டு பணத்தை மக்களின் தேவைக்குப் பயன்படுத்துக

## - ஜே.வி.பி. உறுப்பினர் வலியுறுத்து

(கொழும்பு)

ஊவா மாகாண சபையைச் சேர்ந்த சில அமைச்சர்கள் அண்மையில் மேற்கொள்ளவுள்ள இந்திய சுற்றுலாவை ரத்துச் செய்து அதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை பொதுமக்களின் தேவைகளுக்கு பயன்படுத்துமாறு ஜே.வி.பி. மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்யாரத்ன சபை ஆளுனரிடம் எழுத்து மூலம் கேட்டுள்ளார்.

அண்மைய சில வருடங்களிலிருந்து இன்றுவரை இம்மாகாண சபை பாரிய நிதி வெட்டுக்குள்ளாகியிருப்பதாகவும் நாட்டில் அனைத்து இன மக்களும் பெரும் பொருளாதார கஷ்ட நிலையிலிருப்பதாகவும் இந் நிலையில் இப்படியான சுற்றுலாக்கள் தேவையற்றது எனவும் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# கடனுதவித் திட்டத்தின் கீழ் 500 பேருந்துகள் வழங்க முடிவு

இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் 500 பஸ்கள் (அசோக் லேலண்ட்) தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இவை வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் நாட்டின் பின்தங்கிய பகுதிகளிலும் உள்ள தனியார் பஸ் போக்குவரத்து உரிமையாளர்களுக்கு வழங்கப்படும்.

இந்தியக் கடனுதவித் திட்டத்தின் கீழ் 9 சதவீத வட்டிக்கு இதற்கான கடன் வழங்கப்படும்.

மேல் மாகாணத்தில் 1,500 பஸ்கள் பழுதமடைந்த நிலையிலும் சேவையில் ஈடுபடுகின்றன. இந்த 500 பஸ்களைத் தொடர்ந்து மேலும் பஸ்கள் இந்தக் கடன் திட்டத்தின் கீழ் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் என தனியார் பஸ் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்தார்.

# நிரந்தர சமாதானம் உருவாக்கப்படும் வரை அவுஸ்திரேலியா தமிழரைத் திருப்பியனுப்பக் கூடாது


## - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள்

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை அவுஸ்திரேலியாவில் வாழும் இலங்கைத் தமிழரைத் திருப்பி அனுப்பக் கூடாது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை வந்துள்ள அவுஸ்திரேலிய குடிவரவு மற்றும் பல்கலாச்சாரத்துறை அமைச்சர் பிலிப் காடிப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசேப் பரராசசிங்கம் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தங்கவடிவேலு ஆகியோரும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இலங்கையின் யுத்த சூழ்நிலையால் வடக்குக் கிழக்கிலிருந்து பெருமளவு மக்கள் புலம்பெயர்ந்து அவுஸ்திரேலிய நாட்டில் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நிலையில் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து அங்கு வாழும் இலங்கையரைத் திருப்பி அனுப்ப அவுஸ்திரேலிய அரசு முடிவு செய்திருந்தது. இது தொடர்பாகப் பேச்சு வார்த்தை நடத்திய போது தமிழ் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர். இதனை ஏற்றுக் கொண்ட அவுஸ்திரேலிய அமைச்சர் இது தொடர்பாக தான் அரசுடன் கதைப்பதாக உறுதி கூறினார்.

# முழங்காவில் வரதராசப் பெருமாள் ஆலயத்தில் நாகதர்சன நிகழ்வு

முழங்காவில் விநாயகபுரம் சிறிதேவி பூதேவி சமேத சிறி மத் வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நாக தரிசன அதிசய நிகழ்வு 02.07.2003 புதன்கிழமை நிகழ்ந்துள்ளது. அன்று மாலை 7.00 மணிக்கு வழமை போல் அர்ச்சகர் பூசை செய்வதற்கு மூலஸ்தானத்தைத் திறந்து கிருஸ்ணரிடமிருந்த பட்டைக் களற்றும்போது கிருஸ்ணரைச் சுற்றி நாகபாம்பு படமெடுத்து காட்சி கொடுத்தது. பின்பு அர்ச்சகர் பட்டை களற்றி அபிசேகம் அலங்காரம் செய்து பூசை செய்தபோதும் அருகிலேயே நின்று படமெடுத்தவாறு இரவு 12.00 மணிவரை காட்சி கொடுத்துக்கொண்டு நின்றது. இந்த அருட்காட்சியை பெருந்திரளான அடியார்கள் வருகை தந்து தரிசித்துச்சென்றுள்ளார்கள்.



# படையினரால் கைதாகி காணாமல் போனோரின் மரணச் சான்றிதழ் பெறுவதில் குடும்பத்தவர் சிரமம்

சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களின் மரண அத்தாட்சிப் பத்திரத்தை உடனடியாகப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாக, காணாமல் போனோரின் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். அவசர காலச் சட்டம் நடைமுறையில் இருந்தபோது, காணாமல் போனவர்களின் மரண அத்தாட்சிப் பத்திரத்தைப் பெறுவதற்கு விசேட ஏற்பாடு இருந்தது.

அதன்படி ஒருவர் காணாமல் போய் ஒரு வருடத்தின் பின்னர் மரண அத்தாட்சிப் பத்திரம் பலத்த பிரயத்தனத்தின் பின் வழங்கப்பட்டு வந்தது.

ஆனால், தற்போது அவசர காலச் சட்டம் நடைமுறையில் இல்லாமையால், காணாமல் போனவர்களின் மரண அத்தாட்சிப் பத்திரத்தைப் பெறுவதற்கு விசேட ஏற்பாடு செயலிழந்துள்ளது.

இப்போதைய நடைமுறையின்படி, காணாமல் போனவர்களுக்கான மரண அத்தாட்சிப் பத்திரத்தை பெற வேண்டுமானால், ஏழு வருடங்கள் கழிந்த பின்னரே நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து பெற வேண்டும்.

இதனால், வடக்கு-கிழக்கு பகுதிகளில், படையினரால் கைதாகி காணாமல் போனோரின் குடும்பத்தினர் பெரிதும் பாதிப்புக்களை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

# ஊறணி அதிரடிப்படை முகாம் இடமாற்றத்தால் விவசாய முயற்சிகள் பெரும் பாதிப்பு

(மட்டக்களப்பு)

அம்பாறை ஊறணி சிறிலங்கா விசேட அதிரடிப்படை முகாமை இடமாற்ற எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையில் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த படை முகாம் 5ஆம் கட்டை தமிழர் விவசாய பிரதேசத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி அதிரடிப்படை முகாம் 18 தனியார் வீடுகளை கொண்டிருந்ததுடன் பல பொதுக் கட்டடங்களையும் உள்ளடக்கியிருந்தது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக இப் பகுதியிலிருந்து முகாமை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற போதிலும் தற்போதைய இடமாற்றும் முயற்சியால் பெரும் நெருக்கடி எதிர்நோக்கப்பட்டுள்ளது.

பல வழிகளிலும் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த மக்களுக்கு மேலும் படையினரால் பாரிய விவசாயப்பின்னடைவு ஏற்படும் அபாயம் உள்ளதாக கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு [வடக்கு- கிழக்கு மாகாண சபை]

## வடக்கு- கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது**

**"ஆ அவ" கடன் இல 1846-SRI(SF)**

# கேள்வி அறிவித்தல் -06

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டடநிர்மாண வேலைகளுக்காக இந்தக் கடனின். ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும் (NECORD), கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்வி பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | KN/NECORD/LS/01 | கிளிநொச்சி கால் நடை வைத்திய நிலையமும், விடுதியும் நிர்மாணம் | எம் 7 | 48000 |
| 02 | KN/NECORD/LS/02 | பூநகரி கால் நடை வைத்திய நிலையமும், விடுதியும் நிர்மாணம் | எம் 6 | 52000 |
| 03 | KN/NECORD/ED/06A | பளை றோ.க.த.க. பாடசாலையில் 110'x25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம். (பகுதி 1) | எம் 7 | 38000 |
| | KN/NECORD/ED/06B | பளை றோ.க.த.க. பாடசாலையில் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'x25' கட்டட நிர்மாணம். (பகுதி 2) | எம் 8 | 16000 |
| 04 | KN/NECORD/ED/07B | புன்னைநீராவி அ.த.க. பாடசாலையில் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'x25' கட்டட நிர்மாணம். (பகுதி 2) | எம் 8 | 16000 |
| 05 | KN/NECORD/ED/09 | பளை மத்திய கல்லூரியில் இரண்டு 120'x25' வகுப்பறைக் கட்டடங்கள் நிர்மாணம்.(பகுதி 1) | எம் 7 | 34000 |
| | KN/NECORD/ED/09 | பளை மத்திய கல்லூரியில் செயற்பாட்டறையும் விஞ் ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'x25' கட்டட நிர்மாணம். (பகுதி 2) | எம் 8 | 16000 |
| 06 | KN/NECORD/ED/10B | கிளிநொச்சி / புனித பற்றிமா றோ.க.த.க. பாடசாலையில் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'x25' கட்டட நிர்மாணம்.(பகுதி 2) | எம் 8 | 16000 |
| 07 | KN/NECORD/ED/12B | பூநகரி மகாவித்தியாலயத்தில் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'x25' கட்டட நிர்மாணம். (பகுதி 2) | எம் 8 | 16000 |
| 08 | KN/NECORD/ED/13A | பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தில் 110'x25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டட நிர்மாணம். (பகுதி 1) | எம் 7 | 38000 |
| | KN/NECORD/ED/13B | பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தில் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'x25' கட்டட நிர்மாணம். (பகுதி 2) | எம் 8 | 16000 |
| 09 | KN/NECORD/AG/01 | பளை கமநல கேந்திர நிலைய மீள்நிர்மாணம். | எம் 7 | 35000 |
| 10 | KN/NECORD/AG/03 | உருத்திரபுரம் கமநல கேந்திர நிலைய மீள்நிர்மாணம். | எம் 7 | 21000 |
| 11 | KN/NECORD/AG/04 | முழங்காவில் கமநல கேந்திர நிலைய மீள்நிர்மாணம். | எம் 7 | 41000 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர். பதிவு, தரவுபடுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறிந்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

II. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இதற்வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும்.இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

III இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி கோரும் ஆற்றலளவைக். கொண்டிருக்க வேண்டும்.

IV மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

V. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்குமுன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

04 மேற்படி பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமைய வேண்டும். ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்(நிக்கொட்) மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

06. கேள்வி ஆவணங்களை 2003 யூலை 23ந் திகதியிலிருந்து ஓகஸ்த்து 05ந் திகதிவரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000/=த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்தி கொள்வனவு செய்து கொள்ளலாம்.

07. கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு I வாசகம் II குறிந்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இது தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

08. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர் கருத்திட்ட கேள்விச்சபை மாவட்டச்செயலகம். கிளிநொச்சி என்ற முகவரிக்கு 2003 ஓகஸ்த்து மாதம் 12 ஆம் திகதி பி.ப.1.00 மணிக்கு முன்பதாக கிடைக்கவேண்டும் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09 கேள்வி சம்பந்தப்பட்ட கூட்டமொன்று ஓகஸ்த்து 01ந் திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**தி.இராசநாயகம்,**
**தலைவர், மாவட்ட கேள்விச் சபை,**
**அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்டம்.**

*(சி-8436)*



## 'சிறுபான்மையினரின்' பாதுகாப்பு

# வடக்கு-கிழக்கில் செய்ய முனைவதை மத்தியில் செய்ய எண்ணாததேன்

**வ**டக்கு -கிழக்கு மாகாணத்திற்கென ஒரு நிர்வாக அலகு அன்றி அதிகாரப் பரவலாக்கல் என்பது குறித்து எப்பொழுது பேசப்பட்டாலும், அங்குள்ள சிறுபான்மையினா - தமிழர் தாயகத்தையே தளமாகக் கொண்டுள்ள முஸ்லிங்கள், திட்டமிட்ட ரீதியில் குடியேற்றப்பட்ட சிங்களவர் - உரிமைகள் குறித்து சிறிலங்கா ஆட்சியாளர்கள் அளவிற்கு அதிகமாகவே பேசுவதுண்டு. ஒருவகையில் பார்த்தால், வடக்கு-கிழக்கை தாயகமாகவும், பெரும்பான்மையினராகவும் உள்ள தமிழ் மக்கள் குறித்துப் பேசுவதை விட இச்சிறுபான்மையினர் தொடர்பாகச் சிங்கள ஆட்சியாளர்கள் பேசுவதுண்டு.

சிறுபான்மை மக்களின் உரிமை குறித்துப் பேசுவதும், கரிசினை கொள்வதும் இங்கு சர்ச்சைக்குரியதென்றோ தவறானது என்றோ கூறுவரவில்லை. ஆனால், வடக்கு-கிழக்கில் வாழும் சிறுபான்மையினர் உரிமை குறித்து இத்தகைய கரிசனை கொள்ளும் சிங்கள ஆட்சியாளர்கள் அன்றும் சரி, இன்றும் சரி இலங்கைத்தீவில் இரண்டாவது பெரிய இனமாகிய தமிழர்கள் மீது ஏன் இந்த அக்கறையும், கரிசனையும் கொள்ளவில்லை. அவ்வாறு கொண்டிருப்பார்களேயானால் இன்று இனப்பிரச்சினை என்ற ஒன்று ஏற்பட்டிருக்கவோ, பெருமளவு இரத்தம் சிந்தவோ, பாரிய பொருளாதார அழிவிற்கு முகம் கொடுக்கவோ வேண்டி வந்திராதல்லவா?

தற்போது விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் கோரிக்கை தொடர்பாகப் புதிய திட்ட வரைவு ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் முன்வைத்துள்ளது. அத்திட்ட வரைவு குறித்து வெளியாகும் தகவல்களின்படி சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கெனவும், மத்திய அரசின் அதிகாரத்தை நிலை நிறுத்தவும் சில சரத்துக்களைச் சேர்த்துக் கொண்டுள்ளது. இதன் பிரகாரம், தற்காலிக நிர்வாக சபையில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசினால் முஸ்லிம் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள், முஸ்லிம், சிங்கள சமூகங்களும் கணிசமான பிரதிநிதித்துவத்தைக் கொண்டதாக இருக்கும் என்பவை முதலில் சுட்டிக்காட்டத்தக்க வையாகும்.

இதில் கணிசமான பிரதிநிதித்துவம் என்பது வடக்கு-கிழக்கு சனத்தொகைக்கு மாறுபட்ட விதத்தில் - அதாவது, அதிகரித்த தொகையில் பிரதிநிதித்துவம் வழங்குவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது. ஆயினும், பிரதிநிதித்துவ வீதமோ அன்றி எண்ணிக்கையோ குறிப்பிடப்படாமையால் இது குறித்து தற்பொழுது பிரஸ்தாபிப்பது பொருத்தப்பாடானதல்ல.

இதேவேளை, இத்தற்காலிக நிர்வாகக் கட்டமைப்புக்கான தலைவர் தெரிவிற்கென இரண்டு யோசனைகளை அரசாங்கம் முன்வைத்துள்ளது. ஒன்று, இரு தலைவர்கள் நியமிக்கப்படுவதென்பது. இதன் பிரகாரம் விடுதலைப் புலிகள் நியமனம் செய்யும் ஒருவர், அரசாங்கம் நியமனம் செய்யும் ஒருவர் என இருவர் தலைவராக இருப்பர். இதில் இரு தலைவர்களுக்கும் தனித் தனியாக வீட்டோ அதிகாரம் உண்டு. இரண்டாவது யோசனையின்படி, தலைவர் தற்காலிக நிர்வாகசபை உறுப்பினர்கள் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்படுவார். இவ்வாறு தெரிவு செய்யப்படும் வேளையில் தற்காலிக நிர்வாக சபை மேற்கொள்ளும் ஒரு தீர்மானம் முஸ்லிம்களையோ அன்றிச் சிங்களவர்களையோ பாதிக்குமானால், அதற்குச் சபையில் பெரும்பான்மையினர் ஆதரவு தேவை என்பது மட்டுமல்ல, முஸ்லிம் அல்லது சிங்கள சமூகங்களின் பிரதிநிதித்துவத்தில் பெரும்பான்மை தேவை என்பது அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள சரத்தாகும்.

மத்திய அரசினதோ அன்றி வடக்கு - கிழக்கில் வாழும் சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலோ அரசாங்கம் இத்தகைய விதிகளை முன்வைப்பது தற்காலிக நிர்வாகக் கட்டமைப்போ அன்றி இடைக்கால நிர்வாகக் கட்டமைப்போ உருவாகுவதற்கு ஏற்றதொன்றாக இருக்கப்போவதில்லை. சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் தவறில்லை. ஆனால், சிறிலங்கா ஆட்சியாளர்கள் சிறுபான்மையினரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பு வழங்கும் நோக்கிலா இதனைச் செய்கின்றார்கள்? அவ்வாறானால் அவர்கள் இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கவும் அவற்றைப் பாதுகாக்கவும் ஏன் முன்வரவில்லை.

இலங்கை 'சுதந்திரம்' பெற்ற கலாத்தில் இருந்து தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளையே சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொண்டிருந்தனர். ஒருபுறம், சிறிதளவேனும் அரசியலமைப்பில் பாதுகாக்கப்பட்டிருந்த உரிமைகளை இல்லாது ஒழித்தனர். மறுபுறம், இலங்கைக்கென உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புக்களை தமிழ் மக்களின் அபிப்பிராயங்களையும், ஆலோசனைகளையும் புறந்தள்ளியே உருவாக்கினர்.

1972இல் முதலாவது குடியரசு யாப்பை வரைந்த சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசாங்கம் தமிழ் மக்களின் பிரதிநிதிகளின் அபிப்பிராயம் எதையுமே பொருட்படுத்தவில்லை. தேர்தலில் இடதுசாரி ஐக்கிய முன்னணி பாராளுமன்றத்தை ஒரு அரசியல் யாப்பு நிர்ணய சபையாக மாற்றியபோது அதில் கலந்து கொள்வதா? இல்லையா என்பது குறித்து தீவிரமாக ஆராய்ந்த பின்னர் அதில் பங்குபற்றுவதெனத் தீர்மானம் மேற்கொண்ட தமிழரசுக் கட்சி, இலங்கை சமஷ்டி குடியரசின் மாதிரி அரசியல் யாப்புத் திட்டம் ஒன்றையும் அரசியல் நிர்ணய சபையில் முன்வைத்தது.

ஆனால், அது முற்றாக நிராகரிக்கப்பட்ட வேளையில், மொழியுரிமை தொடர்பாக தமிழ் மொழி அமுலாக்கம் பிரயோகம் தொடர்பாக தமிழரசுக்கட்சி முன்வைத்த கோரிக்கைகள்கூட ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. அது மட்டுமல்ல, அரசியல் யாப்பு அமுலாக்கத்திற்கு முன்பாக பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவைச் சந்திக்க மேற்கொண்ட முயற்சிகள்கூட வெற்றி அளிக்கவில்லை.

இந்த வகையில், தமிழர்களின் ஆலோசனைகளும், தமிழ்த் தலைவர்களும் புறந்தள்ளப்பட்டது மட்டுமல்ல, இவ் அரசியல் யாப்பின் மூலம் 'சுதந்திர இலங்கையின்' முதல் அரசியல் யாப்பில் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பும் இல்லாது ஒழிக்கப்பட்டது. அதேவேளை, பௌத்த மதம் அரச மதமாக்கப்பட்டு சிறுபான்மையினர் மத ரீதியிலும் புறந்தள்ளப்பட்டனர்.

இது இவ்வாறாக இருக்கையில், 1978இல் ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசாங்கம் உருவாக்கிய அரசியல் யாப்பிலும் இவ்வாறே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் புறந்தள்ளப்பட்டனர். தேர்தல் விஞ்ஞாபனத்தில், தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு சர்வகட்சி மாநாடு மூலம் தீர்வு காணப்படும் என உறுதி அளித்த ஐ.தே.கட்சி, தேர்தலில் வென்ற பின்னர் சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டாமலே பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றைக் கூட்டி அதன் மூலம் அரசியல் யாப்பை மாற்றியமைக்க முற்பட்டனர். இதனைத் தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்த்ததோடு, பகிஷ்கரிக்கவும் செய்தது. இந்நிலையில், தமிழர்களின் அபிப்பிராயம் பெறப்படாமலேயே புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது.

அரசியல் யாப்பு விவகாரங்கள் ஒருபுறம் இருக்க, மலையக மக்களின் பிரஜா உரிமை பறிப்பு, தனிச் சிங்கள மசோதா பயங்கரவாதத் தடைச் சட்டம் எனப் பல்வேறு ஒடுக்குமுறைச் சட்டங்களை அமுல் செய்த சிறிலங்கா ஆட்சியாளர்கள் எவருமே தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாப்பு என்பன குறித்து எதையுமே கருத்திற்கொள்ளவில்லை. ஒரு மனிதனின் அடிப்படை உரிமைகளையே மீறும் வகையில் மிக மோசமாக நடந்து கொண்டனர்.

ஆனால், இன்று தமிழர் தாயகப் பகுதியில் நிர்வாக அலகு ஒன்று உருவாக்கப்படுவது குறித்துப் பேச்சுக்கள் எழும் நிலையில் சிறுபான்மையிர் உரிமைகள் பாதுகாப்பு என்ற ரீதியில் பல சரத்துக்களை விதிகளை உருவாக்க அரசாங்கம் விழைகின்றது. இவ்வாறு உருவாக்கப்படுவதற்கு சிறிலங்கா ஆட்சியாளர்கள் வடக்கு - கிழக்கில் உள்ள சிறுபான்மையினர் ... தமிழ் மக்கள் மீதும், விடுதலைப் புலிகள் மீதும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்று காரணம் கூற முற்படலாம். ஆனால், அவ்வாறு அவநம்பிக்கை கொண்டவர்கள் பிரச்சினைகளுக்கெல்லாம் அரசாங்கம் இவ்வாறான தீர்வை முன்வைக்கக் கூடிய நிலையில் உள்ளதா?

எடுத்துக் காட்டாக இலங்கைத் தமிழ் மக்கள் நீண்ட காலமாகவே சிறிலங்கா ஆட்சியாளர்கள் மீது அவநம்பிக்கை கொண்டவர்களாகவே உள்ளனர். அவ்வாறானால், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கத்தால் வடக்கு-கிழக்கில் வாழும் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் போன்று மத்தியிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமா?

அதாவது, இலங்கைக்கு இரு ஆட்சித் தலைவர்களையோ அன்றி மூன்று ஆட்சித் தலைவர்களோ இவர்களால் ஏற்றுக் கொள்ள முடியுமா? அதிலும், தமிழ் மக்களுக்கு பாதகம் விளையும் எனக் கருதும் திட்டங்களை வீட்டோ செய்யும் அதிகாரத்துடன் கூடியதாக இப்பதவிகளைத் தமிழர் ஒருவருக்கோ அன்றி விடுதலைப்புலிகளுக்கோ வழங்க முடியுமா?

அடுத்ததாக, பாராளுமன்றத்தில் தமிழ் மக்களுக்கோ அன்றி விடுதலைப் புலிகளுக்கோ பாதகமானதொரு சட்டம் கொண்டுவரப்படுகையில் அதற்கு விடுதலைப் புலிகளின் அங்கீகாரம் அவசியம் என்ற ரீதியில் சட்டம் ஒன்றைக் கொண்டுவர ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தால் முடியுமா?

சரி இலங்கைத் தமிழர் விவகாரத்தைத் தான் விடுவோம், மலையக தமிழ் மக்கள் தொடர்பாக இவ்வாறானதொரு நிலைப்பாட்டை அவர்களினால் எடுக்க முடியுமா? எடுத்துக் காட்டாக மத்திய மாகாணத்தில் மலையகத் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு அரசாங்கத்தால் இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமா? அதாவது, இணைத்தலைமையையும், வீட்டோ அதிகாரத்தையும் உள்ளடக்கியதாக மலையக மக்களின் பிரச்சினைகளுக்குத்தீர்வுகாணப்படும் என அரசாங்கத்தால் உறுதி கூற முடியுமா?

இத்தனைக்கும் மலையக மக்களும் சிறிலங்கா அரசாங்கம் மீது அவநம்பிக்கை கொண்டவர்களாகவே உள்ளனர். சிங்கள ஆட்சியாளர்கள் குண்டரின்மூலம் கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகள்-சட்டரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறைகள் என்பன காரணமாக சிங்கள ஆட்சியாளர்கள் மீதும், சிறிலங்கா அரசாங்கத்தின் மீதும் இது ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மலையக மக்களுக்காக சிங்கள அரசாங்கங்கள் அனுதாபம் கொள்ளதது ஏன்?

இத்தகைய கேள்விகள் ஒருபுறம் இருக்க, சிறிலங்கா ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுடனான அதிகாரப் பகிர்வு தொடர்பான சூழ்நிலைகள் எழும்போதெல்லாம் வடக்கு-கிழக்கிலுள்ள சிறுபான்மையினர் குறித்து, குறிப்பாக, முஸ்லிங்கள் குறித்து அக்கறை வெளிப்படுத்துவது வழமையாகும். ஆனால் இது அவர்கள் மீதான அனுதாபத்தினாலோ அக்கறையினாலோ அல்ல என்பதே உண்மையாகும்.

இன்றைய சூழ்நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியானது, ஆளும் கட்சிகளைப் பொறுத்து மிகவும் அவசியமானதொன்று. ஆளும் கூட்டணியில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இடம்பெற்றுள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம் செய்தால் தேசிய அரசியலில் சில மாற்றங்களை அது செய்வதற்கான வாய்ப்புக்கள் கூட சிலவேளை உண்டு.

இதன் காரணமாகவும், முஸ்லிம் காங்கிரஸைத் திருப்திப்படுத்த வேண்டிய தேவை ஓரளவு அரசாங்கத்திற்குண்டு. ஆனால், தனியாக முஸ்லிம் காங்கிரஸைத் திருப்திப்படுத்தும் நோக்கிலே தான் அரசாங்கம் நடவடிக்கைகளை மே[illegible]ண்டுள்ளது எனக் கூறுவதற்கில்லை. அரச[illegible] வடக்கு-கிழக்கில் முஸ்லிம்களின் பாதுகாப்பு, உரிமைகள் குறித்து அரசாங்கம் அக்கறை காட்ட முன்வருவதானது, இனப் பிரச்சினைக்கான அரசியற் தீர்வு விவகாரத்தைக் குழப்பத் திற்குள்ளாக்குதல் அன்றி முறித்துக் கொள்வதற்கான நடவடிக்கையாகவே கொள்ளத் தக்கதாகும்.

அதாவது, சிறிலங்கா ஆட்சியாளர்கள் சிறுபான்மையினரின் பாதுகாப்பு, உரிமை என்பதன் அடிப்படையில், வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான ஒரு நிர்வாக அலகு உருப்பெறாது தடுத்து விடுவதையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டுவருகின்றனர். இதற்காக ஏற்கனவே- அதாவது நிர்வாகக் கட்டமைப்புக்கள் உருவாக்கும் தேவைகள் எழும்போதே சிறுபான்மையினரை கிளறி விடுபவர்களாகவும், அவர்களின் கோரிக்கைகளுக்கும் தேவைக்கும் அதிக அளவில் முதன்மை அளிப்பவர்களாகவும் உள்ளனர்.

எடுத்துக்காட்டாக, பொ.ஐ.முன்னணி அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது வடக்கு-கிழக்கு நிர்வாகம் குறித்த பிரஸ்தாபம் எழுந்தபோது, தென்கிழக்கு மாகாணம் என்ற கோரிக்கை எழுந்தது. பொ.ஐ. முன்னணியும், சனாதிபதி சந்திரிகாவும் அதற்கு ஆதரவு அளிப்பது போன்று நடந்து கொண்டனர். ஆனால, சந்திரிகாவின் அரசியல் தீர்வு யோசனைகள் பிசுபிசுத்துப் போக தென்கிழக்கு மாகாணக் கோரிக்கையும் பிசு பிசுத்துப் போனது.

அதேபோன்றே இன்று வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு குறித்த கோரிக்கை எழுந்துள்ள நிலையில், முஸ்லிம்களுக்குச் சமபங்கு, சமஉரிமை என்பது போன்ற கோரிக்கைகள் எழுந்துள்ளன. அத்தோடு அரசாங்கமும் முஸ்லிம்களின் பாதுகாப்பு, உரிமை என்பது குறித்து பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதாக உள்ளது.

இந்த ரீதியில், தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு என்பதாயினும் சரி, வேறு எந்த நிர்வாக அலகாக இருப்பினும் சரி அங்குள்ள சிறுபான்மையினரின் உரிமை என்ற ரீதியில் அரசு விடுக்கும் கோரிக்கைகள், செய்யும் சிபார்சுகள் என்பன சமாதான நடவடிக்கைகளுக்குப் போடும் முட்டுக் கட்டைகளாகவே கொள்ளுதல் பொருத்தப்பாடானதாகும். அவ்வாறு இல்லாதுவிடில் இலங்கையில் இன்று சமாதானத்திற்காக மக்கள் இத்தனை தூரம் ஏக்கம் கொள்ளத் தேவையில்லை.

- ஜெயராஜ்

# தமிழீழ வைப்பகம்

# பணிநிலை வெற்றிடம்

**தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணி நிலைகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.**

## 01. பணிநிலை : கணக்காய்வாளர் (பயிலுநர்)

**தகைமை :** ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றின் H.N.D.A கற்கை நெறியில் குறைந்தது 03 வருடங்கள் தேர்ச்சியடைந்தவராக இருக்க வேண்டும்.

**ஊதிய அளவுத்திட்டம் :** 3500 + 4000 (7500/=)

**அகவை எல்லை :** 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

வேண்டுகையாளர்கள் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட தன்விளக்கங்கள் (சுயவிபரம்) அடங்கிய படிவத்துடனும் தேவையான ஆவணங்களுடனும் வரும் 2003.08.09 ஆம் நாள் சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு திருநகர், கிளிநொச்சியில் அமைந்திருக்கும் தமிழீழ வைப்பக நடுவப்பணியகத்திற்கு வருகைதருமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

## 02. பணிநிலை : தட்டெழுத்தாளர் (தமிழ்)

**தகைமை :** க.பொ.த (சா/த) தேர்வில் கணிதம் உட்பட 05 பாடங்களில் இரு அமர்விற்கு மேற்படாது தேர்ச்சியடைந்திருக்க வேண்டும். தேர்ச்சியடைந்த 05 பாடங்களில் தமிழ், தட்டெழுத்து, சுருக்கெழுத்து என்பவற்றில் திறமைச்சித்தி அடங்கியிருக்க வேண்டும்.
க.பொ.த (சா/த) தேர்வில் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பாடத்தில் தேர்ச்சி அல்லாதோர் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட தட்டெழுத்து, சுருக்கெழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**மாத ஊதிய அளவுத்திட்டம் :** $\frac{3670 - 4870}{60 \times 20} + 4000$

**அகவை எல்லை :** 19 - 25

வேண்டுகையாளர்கள் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட தன்விளக்கங்கள் (சுயவிபரம்) அடங்கிய படிவத்துடனும் தேவையான ஆவணங்களுடனும் வரும் 2003.08.08 ஆம் நாள் வெள்ளிக் கிழமை காலை 09.00 மணிக்கு திருநகர், கிளிநொச்சியில் அமைந்திருக்கும் தமிழீழ வைப்பக நடுவப்பணியகத்திற்கு வருகைதருமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

(சி-8430)

**மேலாளர்,
ஆளுகை,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.**

# இத்தாலிசெல்ல முற்பட்ட 114 பேருக்கும் விளக்கமறியல்

சட்டவிரோதமான முறையில் இத்தாலி செல்லமுற்பட்ட 114 வெளிநாட்டவர்களையும் அடுத்தமாதம் 04ம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்கும்படி கண்டிநீதவான் வியோன் செனிவிரத்தின நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இவ்வெளிநாட்டவர்களை விசாரணை செய்வதற்காகதூதரக வட்டாரங்களிலிருந்து மொழிபெயர்ப்பாளர்களின் உதவியைப் பெற வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் வெளிநாட்டவர்களை இத்தாலிக்கு ஏற்றிச் செல்லும் கப்பல் ஒன்று இலங்கைக் கடற்பிரதேசத்துக்கு வந்திருப்பதாகவும் குற்றப் புலனாய்வுப் பொலிசார் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு வெளிநாட்டவர்களைத் தங்க வைத்திருக்கும் ஒரு வீட்டின் உரிமையாளரும் ஊழியரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

# களனி பல்கலையில் மோதல் பரீட்சைகள் ஒத்திவைப்பு

களனி பல்கலைக்கழகத்தின் பரீட்சை நடவடிக்கைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன. பல்கலைக்கழக மாணவர்களை பல்கலைக்கழக வளாகத்தினை விட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக உபவேந்தர் தெரிவித்தார். வெவ்வேறு மாணவக் குழுவினருக்கு இடையில் ஏற்பட்ட மோதலையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிக்கப் வாகனம் ஒன்றில் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற ஒரு குழுவினர் பல்கலைக்கழக மாணவர் ஒருவரைக் கடத்திச்சென்று தாக்கிவிட்டு வீதியில் போட்டுவிட்டுச் சென்றுள்ளனர். தாக்கப்பட்டவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து தாக்குதலுக்கு இலக்கான மாணவர் சார்பாக எதிர்த்தரப்பு மாணவரின் குழுவைச் சேர்ந்தவர்கள் எதிர்த்தரப்பு மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இச்சம்பவத்திலும் ஒருவர் காயமடைந்துள்ளதாக கிரிபாத்கொடைப் பொலிசார் தெரிவித்தனர்.

-வெளிநாட்டு வேலைவாய்ப்பு தருவதாகக்கூறி-

# மோசடி செய்த இருவருக்கு பிணைவழங்க கடும் நிபந்தனை

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி 16 பேரிடம் 38 ஆயிரம் ரூபா வீதம் பணம் சேகரித்து மோசடி செய்த இருவருக்கு ஒரு வழக்கில் 50,000 ரூபா வீதம் எட்டு இலட்சம் ரூபா செலுத்துவதோடு, சரீர பிணையில் செல்வதற்கு கம்பஹா பிரதான மாஜிஸ்திரேட்டும், மாவட்ட நீதிபதியுமான லான் விக்ரமாராய்ச்சி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இரண்டு பேர்களையும் மேலதிக பிணை வைக்குமாறும் நீதிபதி குற்றவாளிகளுக்குத் தீர்ப்பளித்தார்.

மேற்படி தண்டப்பணத் தொகையான எட்டு இலட்சத்தை எதிர்வரும் செப்ரெம்பர் 26ஆம் திகதி முழுமையாகச் செலுத்த வேண்டும் எனவும் அவர் ஆணையிட்டார்.

# அக்கராயன் பிரதேசத்தின் தே.எ.பேரவையின் சங்கமம்

அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு கந்தபுரம் முருகன் ஆலய பொது மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கிருஸ்ண பிள்ளை தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச்சுடரினை இந்து ஆலய ஒன்றியத் தலைவரும் கந்தபுர ஊரக எழுச்சிப் பேரவை செயலாளருமான கிருஸ்ண பிள்ளை ஏற்றிவைத்தார். நிகழ்வில் தேசியக் கொடியினை கிளி. மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூவிழி ஏற்றிவைத்தார்.

நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவையின் நோக்கம், அதன் செயற்பாடுகள் என்பன தொடர்பாக பூவிழி, பிரதேசப் பொறுப்பாளர் முடியரசன், மாவட்டப் பொறுப்பாளர் முரளி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

# கண்டெடுப்பு

சி.கிருஸ்ணகுமார் 53/02 கணேசபுரம் கிளிநொச்சி என்பவருடைய 2003-ம் ஆண்டுக்கான மோட்டார் ஊர்தி அனுமதிப்பத்திரம் கண்டெடுக்கப்பட்டுக் கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

# புற்றுநோய் சிகிச்சை

தெல்லிப்பளை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் இன்று புற்றுநோய் வைத்திய முகாம் நடைபெறவுள்ளதாக அறி விக்கப்பட்டிருக்கிறது.இது நேற்றும் இடம்பெற்றது. மஹரமக புற்று நோய் வைத்தியர் வாணி உ.பிள்ளையினால் மாதம் இருமுறை இவ்வைத்திய முகாம் நடைபெற்று வருகிறது.

# நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு

**தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணிக்காக எம்மால் விளம்பரப்படுத்தப்பட்டு விண்ணப்பங்கள் எமக்கு அனுப்பி வைத்த கீழ்வரும் பணி நிலையாளர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் குறிப்பிடப்படும் திகதிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடுவப்பணியகத்தில் இடம்பெறும் . சகல சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

*சாரதிகள் :26–07–2003 காலை 10.00 மணி*

*மொழி பெயர்ப்பாளர்கள் : 26.07.2003 பி.ப 03.00 மணி*

குறிப்பு: ஏற்கனவே கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களும் ஒப்பந்தக்காலம் முடிவுற்றதால் மீளவும் நேர்முகத் தேர்வுக்கு சமுகம் தரவும்.

*தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
நடுவப்பணியகம்,
கண்டிவீதி,
கிளிநொச்சி.*

(சி.8435)



## சிந்தனைக்கு

எமது மொழியில், எமது கலைகளில், எமது பண்பாட்டில், எமது மண்ணில் நாம் கொள்ளும் பாசமும் நேசமும் தேசியப்பற்றுணர்வாகப் பரிணாமம் பெறுகின்றன.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 23-07-2003

## இன்றைய சமுதாயமே பொறுப்பு

யாழ். மாவட்ட மாணவர் மத்தியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதாகவும்- இதன் விளைவாக வன்முறையும், பாலியல் பலாத்கார நிகழ்வுகள் இடம்பெற்று வருவதாகவும் வெளியாகும் தகவல்கள் மிகைப்படுத்தப்பட்டவையல்ல. இத்தகைய தகவல்கள் கவலையளிப்பவையாக இருப்பினும் அதுவே யதார்த்தமாகவுள்ளது.

இன்று யாழ். குடாநாட்டில் சந்திக்குச்சந்தி மதுபானச் சாலைகள் திறக்கப்பட்டிருப்பதும், இளைஞர்கள் கோஷ்டி மோதல்களில் ஈடுபடுவதும், பாலியல் பலாத்காரம் தொடர்பான தகவல்கள் அதிகரித்த அளவில் வெளிவந்து கொண்டிருப்பதும் இன்றைய யதார்த்தத்தின் பிரதிபலிப்பாகவே கொள்ளத்தக்கவையாகும்.

யாழ். குடாநாட்டில் கல்வித்தரம் வீழ்ச்சி கண்டு வருவதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கும் மேற்கூறப்பட்ட போதைப் பொருள் பாவனை மற்றும் மாணவர்கள் மத்தியில் அதிகரித்து வரும் ஒழுக்கச் சீர்கேடுகள் என்பன காரணம் எனில் தவறில்லை.

கல்வியிலும், சமூக ஒழுக்கம் – கட்டுப்பாடு என்பனவற்றிலும் பெரிதும் முனைப்புடன் காணப்பட்ட யாழ். சமூகத்தில் இன்று ஏற்பட்டுள்ள இவ் அவல நிலையானது ஒரு தரப்பால் திட்டமிட்ட ரீதியில் புகுத்தப்பட்டதெனின் இன்னொரு தரப்பின் நடவடிக்கைகளின் எதிர்விளைவினால் இந்நிலை ஏற்பட்டது எனக் கூறுதல் தவறாகமாட்டாது.

யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்த சிறிலங்கா இராணுவம், யாழ். இளைஞர்களின் சிந்தனையைத் திசைதிருப்புவதற்காக– அதாவது, விடுதலை உணர்வை மழுங்கடிக்கும் வகையிலான நடவடிக்கைகளில் முனைப்புடன் செயற்பட்டது. இதன் விளைவாக, மதுபானம், சிகரெட், போதைப் பொருட்கள், ஆபாசப் படங்கள் என்பன திட்டமிட்ட ரீதியில் அவர்களால் குடாநாட்டிற்குள் பரவவிடப்பட்டன.

இதேவேளை, யாழ். குடாநாட்டில் இருந்த பெற்றோர்களில் ஒரு தரப்பினரும், விடுதலைப் போராட்டம் குறித்த தமது பிள்ளைகளின் சிந்தனை உணர்வுகள் என்பனவற்றை மழுங்கடிக்கும் வகையிலான சில நடவடிக்கைகளுக்கு ஊக்கம் கொடுத்தனர். இதன் காரணமாக பிள்ளைகள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தினர். பிள்ளைகளின் செலவிற்கென அதிகளவு பணத்தையும், வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தனர். அத்தோடு, பிள்ளைகளின் ஒழுக்கக் கேடான நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் தவறினர்.

இதன் விளைவாக, யாழ். குடாநாட்டு இளைஞர்களின் சிந்தனையைத் திசை திருப்பிவிட முனைந்த சிறிலங்கா இராணுவத்தரப்பும் – அரசாங்கமும் சேர்ந்து மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி காண்பதற்கு பெற்றோர்களின் நடவடிக்கைகள் வாய்ப்பாக அமைந்தன. அதாவது, மாணவர்கள், இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதற்கான வாய்ப்பையும் சுதந்திரத்தையும் அவர்களுக்குக் கொடுத்தது.

அத்தோடு, சிறிலங்கா அரசாங்கம் அமுல் செய்துவரும் தீவிர திறந்த பொருளாதாரக் கொள்கையுடன் ஒட்டிப்பிறந்தவையாகச் சமூகச் சீர்கேடுகளாக, போதைப் பொருள் பாவனை, பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர்களைப் பாலியல் துர்நடத்தையில் ஈடுபடுத்துதல், சூதாட்டம் என்பன உள்ளன. இதற்கு உலகில் இன்று தீவிர திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கைக்கொள்ளும் அனைத்து நாடுகளுமே உதாரணங்களாகக் கொள்ளத்தக்கவையாகும்.

இந்த வகையில், திறந்த பொருளாதாரக் கொள்கையின் மையப் பிரதேசமாகவுள்ள கொழும்புடன் யாழ். குடாநாடும் தொடர்புகளை அதிகமாக வளர்த்தெடுத்துக் கொண்டிருந்தமையும், வெளிநாட்டுப் பயணங்கள், வேலை வாய்ப்புக்கள் மற்றும் ஏனைய வசதிகளுக்காக கொழும்பை மையமாகக் கொண்டு யாழ். இளைஞர்கள் – யுவதிகள், மாணவர்கள் செயற்பட முற்பட்டு நின்றமையும் இத்தகைய நிலை யாழ். குடாநாட்டில் ஏற்படுவதற்கு காரணமாகும்.

இந்த ரீதியில், யாழ். குடாநாட்டில் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட செயற்பாடு, யாழ். பெற்றோர்களின் பொறுப்பற்றதனம், இலங்கையின் பொதுவான சூழல் என யாவும் ஒன்று சேர்ந்து யாழ். குடாநாட்டின் இன்றைய இளைஞர்களின் நிலைக்குக் காரணமாகியது. இதற்கு இவ் இளைஞர்கள், மாணவர்கள் ஆகியோரைக் குறைகூறுதல் என்பதைவிட ஒட்டுமொத்தமாக யாழ். சமுதாயத்தையே குறை கூறுதல் வேண்டும்.

ஏனெனில், எதிர்காலத்தில் சமுதாயத்திற்கு தலைமை தாங்கப்போகும் இளைஞர்களை விழிப்புடன் இருந்து வழிநடத்தியிருக்க வேண்டியது இன்று சமுதாயத்தினை வழிநடத்திச் செல்வோரின் பொறுப்பே ஆகும். அதிலும் குறிப்பாக, டீன் – ஏஜ் பருவத்திலுள்ளவர் மீது சமூகம் விழிப்பாகவே இருந்திருத்தல் வேண்டும். தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை தோற்கடிக்க சிங்கள ஆட்சியாளர்கள் தம்மால் இயன்ற அனைத்தையும் செய்வார்கள் என்பது எதிர்பார்க்கப்படக் கூடியதே. உலகில் இவ்வாறு நடந்தமைகளை வரலாறுகள் கூட உண்டு. ஆகையினால், விழிப்புடன் இருக்கத் தவறியது யாழ். சமுதாயத்தின் தவறே ஆகும். இதனால், யாழ். சமுதாயம் இன்று எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்குப் பொறுப்பேற்க வேண்டியவர்களும் அவர்களே.

# சனாதிபதி இணக்கமின்றி இடைக்கால நிர்வாகம் கையளிப்பின் வெளிநாட்டு உதவிகள் பாதிப்புறும்

## சட்ட ஆய்வாளர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

சனாதிபதியின் இணக்கமின்றி இடைக்கால நிர்வாகசபை அதிகாரம் புலிகளிடம் கையளிக்கப்பட்டால் டோக்கியோ நன்கொடை போன்ற வெளிநாட்டுதவிகள் சிறிலங்காவுக்கு கிடைக்காது போகலாம். என சட்ட ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் சமாதானம் ஏற்பட்டால் மட்டுமே அபிவிருத்திக்கான நிதி உதவிகள் வழங்கப்படும் என டோக்கியோ மாநாட்டில் சம்பந்தப்பட்ட நாடுகள் தெரிவித்திருந்தன. தற்போது விடுதலைப்புலிகள் கோருவது போன்று உடன்பாடு ஒன்றுக்கு வருவதாயின் இடைக்கால நிர்வாகம் வழங்கப்படவேண்டியுள்ளது. எனினும் இதற்கு சனாதிபதி மறுப்புத் தெரிவித்திருக்கிறார். அதனால் ஆளும் ஐ.தே.மு.வுக்கு புலிகள் கேட்பதை வழங்கமுடியாதுள்ளது.

எப்படியாவது நிறைவேற்றதிகாரத்தின் அதிகாரமின்றி இடைக்கால சபைக்கு அனுமதி வழங்கப்பட்டால் அது உயர் நீதிமன்றம் வரை கொண்டு செல்ல சனாதிபதிக்கு உரிமையுள்ளதாக முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிரானதாக இருப்பின் அரசு இடைக்கால நிர்வாக அமைப்பை நீக்கிவிட நேரிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நீதிமன்றத் தீர்ப்புகள் சந்தேகப்படத்தக்கவை சரியான தீர்ப்புக்கள் கிடைப்பதில்லை!

## -ஒருங்கிணைந்த அமைச்சுக்களின் செயலர் கருத்து

(கொழும்பு)

"நீதிமன்றங்களில் பாரப்படுத்தப்படும் வழக்குகளுக்கு எப்போதும் சரியான தீர்ப்பை வழங்கித் தீர்வு காணப்படுவதில்லை. வழங்கப்படும் தீர்ப்பும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதா எனச் சந்தேகம் கொள்ள வைக்கிறது". தற்போது இந்தக் கருத்துக்கள் மக்கள் மனங்களில் எழுந்துள்ளதாக அகில இலங்கை ஒருங்கிணைந்த அமைச்சுக்களின் செயலாளர் தாரா விஜயதிலக தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சின் கேட்போர் கூடத்தில் நடந்த விழா ஒன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது, கடந்த பதின்மூன்று வருடங்களாக இணக்கச் சபைகள் திறம்பட இயங்கி வந்துள்ளன. நாம் 12 சபைகளை உருவாக்கியிருக்கிறோம். மக்கள் இதனை ஏற்றுக் கொள்வார்களோ என்ற சந்தேகம் இருந்தது எனினும் அது மறைந்து விட்டது.

இன்று இலங்கையில் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் வழங்கும் முறை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. சரியான நடைமுறைகளைக் கொண்டு வருவதும் இதனை மாற்றியமைப்பதும் எமதும் அரசியல் வாதிகளினதும் பொறுப்பாகும் என்றார்.

இணக்கச் சபை ஆணைக்குழுவின் உறுப்பினர் அங்கு பேசுகையில், எந்த உயரதிகாரிகளினதும் அழுத்தங்களுக்குப் பணியாமல் இணக்கச் சபைகள் சுயசிந்தனையுடன் திறமையாகச் செயற்பட்டு வந்துள்ளதாகவும் நீதிமன்றங்களினால் தீர்க்கப்படாத வழக்குகள் இணக்கச் சபைகள் மூலம் வெற்றிகரமாகத் தீர்த்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# அமெ.உளவு அதிகாரிகளின் தேவை குறித்து சிறில.அதிகாரிகளே தீர்மானிக்கலாம்

## சிறிலங்காப் பிரதமர் ஆலோசனை

(கொழும்பு)

வெளிநாட்டு உளவுப்பிரிவினரின் உதவி தேவையில்லை என உள்நாட்டு உளவுப் பிரிவு அதிகாரிகள் கருதினால் அவர்களை வெளியேற்றத் தயாராக இருப்பதாக சிறிலங்காப் பிரதமர் கூறியுள்ளார்.

அண்மையில் சிறிலங்காவின் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட மாநாட்டில் அமெரிக்க உளவுப் பிரிவு அதிகாரி ஒருவர் கலந்துகொண்டதால் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

முப்படைகளின் தலைபதியான சனாதிபதி இது குறித்துக் கடும் ஆட்சேபம் தெரிவித்ததுடன் இனிவரும் கூட்டங்களில் இவ்வாறு அனுமதிக்கக் கூடாதெனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர்களை அலரி மாளிகைக்கு அழைத்த பிரதமர் இது தொடர்பாக ஆலோசனை நடத்தியிருக்கின்றார். இதன்போது வெளிநாட்டு உளவுத்துறையினரின் பணிகுறித்து விளக்கிய பிரதமர் அவர்களின் சேவையைத் தொடர்ந்து பெறுவது குறித்து தீர்மானிக்குமாறு உளவுத்துறையினரைக் கேட்டிருக்கின்றார்.

# கடமையைச் சரிவர மேற்கொள்ளாத 6 பொலிஸ் அதிகாரிகள் வேலை நீக்கம்!

(கொழும்பு)

தமது கடமைகளைச் சரியாக மேற்கொள்ளவில்லையென்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் அறுவர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மோசடிகள், ஊழல்கள், கடமையைப் புறக்கணித்தல், வாகனங்களை விபத்துக்குள்ளாக்குதல் போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரிலேயே இவர்கள் பதவி நீக்கம் பெற்றுள்ளனர். இவ்வாறு பதவி நீக்கம் பெற்றோர் களவான, பன்னல, சூரியவெவ, லுணுகல, வரக்காப்பொல, வதுரம்ப ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொறுப்பதிகாரிகள் ஆவர்.

பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவின் பணிப்பின் பேரில் பொலிஸ் ஆணைக்குழு மூலம் இவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். குற்றச்சாட்டுகள் தொடர்பாகப் பொலிஸ் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

# கிளி. மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

தமிழீழ விளையாட்டுத்துறை அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கிளி. மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி க.கனகராசா தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி அரச செயலகத்தில் நேற்றுக்காலை 11.00 மணியளவில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம், மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம், வன்னிமாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ராஜா, கிளி. மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தேவன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றியதுடன் உபகரணங்களையும் வழங்கிச் சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் 49 கழகங்களைச் சேர்ந்த பெருமளவான விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டனர். (சு)


# தோல்வியால் கவலையடையத் தேவையில்லை

## டேவ் வட்மோர்

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் தோற்றதற்காக பங்களாதேஷ் அணி வெட்கப்படத்தேவையில்லை என்று அந்த அணியின் பயிற்சியாளர் டேவ் வட்மோர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணியின் தோல்வி குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா, பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் மிகப்பெரிய இடைவெளி உள்ளது. இருப்பினும் இந்த டெஸ்ட் போட்டியின் மூலம் பங்களாதேஷ் அணிக்கு ஒரு உற்சாகமளிக்கும் சாதகமான அறிகுறிகள் தென்பட்டுள்ளது. இந்தடெஸ்ட் போட்டியானது எமது அணிக்கு ஒரு சிறந்த திருப்புமுனையாகும். இந்த டெஸ்ட் போட்டியில் கிடைத்த அனுபவம் மூலம் அடுத்த போட்டியில் சிறப்பாக விளையாடுவோம் என்றும் கூறியுள்ளார்.



# பாடசாலை கையளிப்பு வைபவத்தில் கலந்துகொள்ள அமைச்சர்கள் எவரும் அருகதையற்றவர்கள்

## - பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்

சிறிலங்கா அமைச்சர்கள் எவரும் இவ்வாறான வைபவங்களில் கலந்து கொள்ள அருகதையற்ற வர்கள் என பாடசாலைகள் மீள் கையளித்தல் தொடர்பான நிகழ்வு இடைநிறுத்தப்பட்டமை தொடர்பாக யாழ்பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பகீரதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஜீ.ரி.சற். நிறுவனத்தினால் புனரமைப்பு செய்யப்பட்ட பாடசாலைகள் ஏற்கனவே உரிய அதிபர்களிடம் பல மாதங்களுக்கு முன்னர் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது. ஆனால் மீண்டும் இந் நிகழ்வொடு எந்த வகையிலும் தொடர்பு பட்டிராத சிறிலங்கா அரசாங்கத்தின் புனர்வாழ்வு அமைச்சினால் அன்று மீண்டும் வைபவரீதியாக கையளிக்கப்பட இருந்தது.

யாழ்குடாநாட்டில் இன்று பாடசாலைகள் இராணுவ ஆக்கிரமிப்பு முகாம்களாகவும் இராணுவ அச்சுறுத்தல்களின் மத்தியிலுமே இருக்கின்றன. இப்பாடசாலைகளை மீள ஒப்படைக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்காத சிறிலங்கா அரசாங்கத்தின் எந்த அமைச்சர்களாக இருந்தாலும் இவ்வாறான ஒரு வைபவத்தில் கலந்துகொள்ள அருகதையற்றவர்கள். இதனாலேயே இந்நிகழ்விற்கு வருகைதந்த அமைச்சரரைக் கலந்துகொள்ள வேண்டாம் என பல்கலைக்கழக மாணவர்களும், பொதுமக்களும் திருப்பி அனுப்பிவிட்டு இந்நிகழ்வை ஏற்பாடு செய்த ஜீ.ரி.சற். நிறுவனத்தினரை சகல மரியாதைகளோடு மட்டுமல்லாது எமது மாணவர்களும் மக்களும் அழைத்துச் சென்று இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு சில மணிநேரங்களின் பின் மீண்டும் இந்நிகழ்வை அரசியல் இலாபம் தேட முயற்சித்தவர்கள் அமைச்சரை மீண்டும் அழைத்து யாழ்.பல்கலைக் கழக வளாக வாயிலில் வைத்து மாலை அணிவித்து பாடசாலைகளை மீண்டும்இரண்டாவது தடவையாக அதிபர்களிடம் கையளிக்க முயற்சித்த வேளை, மாணவர்களும் மக்களும் மீண்டும் அமைச்சரை உரிய மரியாதையோடு திரும்பிச் செல்லுமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க அமைச்சர் திரும்பிச் சென்றார்.

அத்தோடு நிகழ்வு பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து மேற்கொண்டு நடாத்தப்படுவதற்கு மாணவர்கள் அனுமதி வழங்கவில்லை. இந்நிகழ்வை ஒழுங்கு செய்த ஜீ.ரி.சற். நிறுவனத்தினர் இந்நிகழ்வை நடாத்துவதில் எமக்கு எதுவித ஆட்சேபனையுமே இல்லை. இதனால் தான் அவர்கள் இந் நிகழ்வை நடாத்த அனுமதித்தோம். ஆனால் அவர்கள்எமது மாணவர்களை ஏமாற்றிவிட்டு மீண்டும் நிகழ்வை அமைச்சரை அழைத்து நடாத்த முயற்சித்தமை எமக்கு மிகவும் ஆத்திரமூட்டும் செயலாகவே இருந்தது. அதனால் நாம் இந்நிகழ்வை பல்கலைக்கழகத்தில் நடத்தவிடாது இடைநிறுத்தியுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்கச் சிப்பாய் பலி

பாக்தாத்திற்கு வட மேற்கே அமெரிக்க இராணுவ வாகனத்தின்மீது நேற்று நடைபெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் ஒரு அமெரிக்கப்படைச் சிப்பாய் கொல்லப் பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவம் கூறியுள்ளது.

இராணுவ வாகன அணி சென்றுகொண்டிருக்கையில் ஒளித்திருந்த தாக்குதலாளர்கள் ரொக்கற்றுக்களால் ஏவப்படும் கிறனைற்றுக்களால் தாக்கப் பட்டுள்ளதாகவும் இராணுவம் கூறியுள்ளது.

### வாழைச்சேனை...

இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஆத்திரமடைந்த பொதுமக்களால் பொலிஸ் நிலையத்தின் மீது கல் வீச்சும் நடாத்தப்பட்டுள்ளது.

கும்புறுமுனை படையினரால் ஐந்து பொதுமக்கள் தாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### மட்டு.-அம்பாறை...

மீறல் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த இரண்டு நாட்களும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

### 55 பாடசாலைகள்...

வில்சன் திட்டமிட்டபடி ஜெயலத்தே கையளிப்பைச் செய்ய வேண்டும் என முடிவு செய்து அதனை பல்கலைக கழகத்திற்கு வெளியே நடத்தவும் தீர்மானித்தார். இதற்கு தொலைபேசி மூலம் ஜெயலத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டதால் அவரும் வந்து பல்கலை வாயிலில் வைத்து கையளிப்பு வைபவத்தை நடத்த முற்பட்ட வேளை இதற்கும் பல்கலைக்கழக மாணவர்கள் தமதுஎதிர்ப்பைக் காட்டியதுடன் அமைச்சரையும் வானில் ஏற்றி அனுப்பினர்.

இதனால் நிகழ்வில் கலந்து கொள்ள வந்தோரும் திரும்பிச் சென்று பின் வைபவம் யாழ். பஸ்தியான் சந்தியில் உள்ள ஜி.ரி. சற்றின் யாழ். மாவட்ட தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. (33)

### கண்ணி வெடியில்...

முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் அதிகளவு இரத்தம் வெளியேறிய நிலையில் யானை மிகவும் சோர்வடைந்த நிலையில் உள்ளது.

கண்ணிவெடியில் சிக்கி காயமடைந்த காட்டு யானைக்கு இன்று மருத்துவர் குழு மூலம் சிகிச்சையளிக்கப்படவுள்ளது.

தெஹிவலை சரணாலய மருத்துவர் டாக்கா தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்று சிகிச்சையளிக்கவுள்ளனர். (லோ.பா.)

### வவு. சமளங்குளம்...

இப்பாடசாலை ஆசிரியர்கள் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றார்கள் எனவும் அவ்வாறு இனி நடக்கக்கூடாதென இளம் பெண் ஆசிரியர்களை மிரட்டியுள்ளனர்.

அதன் பின்னர் பாடசாலையை விட்டு வெளியே சென்ற இராணுவத்தினரும், பொலிசாரும் பாடசாலை விடும் வரை அதன் முன் நின்றுள்ளனர். அத்துடன் திங்கட்கிழமை இப்பாடசாலை முன்பாக இராணுவத்தினின் உந்துருளி அணியினர் அடிக்கடி சென்று மாணவர்களை அச்சம் அடையச் செய்யும் வகையில் நடந்துள்ளனர்.

இதனால், இப்பாடசாலையில் நேற்று முன்தினமும், நேற்றும் கற்றல், கற்பித்தல் பணிகள் பெருமளவு பாதிப்படைந்துள்ளன.

இராணுவத்தினரின் இந்நடவடிக்கை குறித்து இப்பாடசாலை ஆசிரியர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

### படையினரும்...

தல் நடாத்தப்பட்டது.

இவ்வாறான தாக்குதலை நேற்று அம்பாறை கோமாரி பிரதேசத்தில் இளைஞர் குழுவுடன் அப்பகுதி விசேட அதிரடிப்படையினரும் நடத்தினர். மேற்படி சம்பவம் பெரிது படாமல் அப்பகுதி விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் யோக நம்பி நிலைமையைச் சீர்செய்தார்.

இவற்றுடன் காரைதீவு விசேட அதிரடிப்படையினர் பொதுமகன் இருவரைத் தாக்கிய சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதி பொதுமக்கள் அனைவரும் ஒன்று கூடி விசேட அதிரடிப்படையினர் மீது கல்லெறிந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பொதுமகன் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பதிலுக்கு பொதுமக்கள் தாக்கியதில் விசேட அதிரடிப் படையினரில் ஒருவர் காயமுற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நேற்று முன்தினம் மாலை 7.30 மணியளவில் திருக்கோயில் பிரதான வீதியால் பொதுமக்கள் வந்து கொண்டிருந்த ஆட்டோவினை மறித்து அப்பகுதி ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் தாக்குவதற்கு முற்பட்டுள்ளனர்.

இதேவேளை செங்கலடி ஆறுமுகத தான் குடியிருப்பு பகுதியில் பல இளைஞர்கள் படையினரின் நடவடிக்கைகளை எதிர்த்து கோஷம் எழுப்பியதைத் தொடர்ந்து ஏறாவூர் பொலிஸ நிலையத்திலுள்ள முஸ்லிம் பொலிஸாரால் தாக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் நடைபெற்றதைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. இவற்றுடன் வந்தாறுமூலை, மாவடிவேம்பு, சித்தாண்டி, சந்திவெளி, கிரான், கறுவாக்கேணி போன்ற பல இடங்களிலும் படையினரால் பொதுமக்கள் அடாவடித்தனமான முறையில் தாக்கப்பட்டுள்ளனர்.

### இராணுவச் சீருடை...

வெருகப் பிறப்பிற்காக தனது தந்தையினால் கடையில் கொள்வனவு செய்து கொடுக்கப்பட்ட மேற்படி உடையை அணிந்த சிறுவன் தமது பெரியம்மாவின் வீட்டிற்கு பிரதான வீதியைக் கடந்து சென்ற வேளை, சிறுவனைக் கண்ட படையினர் தாறுமாறாகத் தாக்கியதுடன் தனியாக அழைத்துச் சென்று மேற்படி உடை அணியக்கூடாது எனவும் மாறாக உடை அணிந்தால் சுட்டுக் கொலை செய்யப்படுவார் எனவும் எச்சரித்து விடுவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று மேற்படி பகுதியில் தமிழ் இளைஞர்கள் மீது படையினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர். மேற்படி சம்பவங்களை இன்று போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினருக்கு பாதிக்கப்பட்ட சிறுவன் உட்பட பொதுமக்களும் அறிவிக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

### கைது செய்ய...

சாவகச்சேரியில் கடமையாற்றிவந்த சந்திரிகா என்ற பெண் இராணுவச் சிப்பாய் கடமை நேரத்தில் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் சாவகச்சேரி நீதவான் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (27)

---

### மூதூர் இளக்கந்தையில்

# புதிய பாடசாலைக் கட்டடத்தை கேணல் பதுமன் திறந்து வைப்பு!

(திருகோணமலை)

திருகோணமலை - மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் இளக்கந்தை கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலைக் கட்டடத்தினை தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் நேற்று திறந்து வைத்துள்ளார்.



17 இலட்சம் ரூபா செலவில் "நிக்கோட்" அமைப்பின் நிதி உதவியுடன் இப்பாடசாலை கட்டப்பட்டது.

1990 ஆம் ஆண்டு சிறிலங்கா கடற்படை நடத்திய தாக்குதலில் இப்பாடசாலைக் கட்டடங்கள் சேதமடைந்தன.

இந்நிகழ்வில் பிரதேசப் பொறுப்பாளர் உதயன் தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றினார். திருகோணமலை காவல் பணிமனைப் பொறுப்பாளர் தமிழரசன் சுடரேற்றினார்.

பாடசாலைப் பெயர்ப்பலகையை 'நிக்கோட்' சார்பில் இலங்காநேசனும், திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக்கும் திறந்து வைத்தனர்.

### நோர்வே புதிய...

வரைவு தொடர்பாக மேற்குலக நாடொன்றில் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படும் பேச்சுக்கள் குறித்து விடுதலைப்புலிகளுடன் ஆராய்வதற்காகவே வெஸ்பேர்க் கிளிநொச்சிக்குச் சென்றதாக மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது.

இச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் ஜோர்ஜ், தொல்காப்பியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.


## சகல கால்நடைப் பண்ணையாளர்களதும் கவனத்திற்கு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்டச் செயலகமும் மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து வழங்கவிருக்கும் கால்நடை வைத்திய மற்றும் பயிற்சிகள் பின்வரும் ஒழுங்கிற்கு அமைய நடைபெறவிருப்பதால் அனைவரும் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| திகதி | இடம் | செயலகம் |
|---|---|---|
| 23.07.2003 | விசுவமடு மேற்கு | தொட்டியடி சனசமூகநிலையம் |
| 24.07.2003 | விசுவமடு கிழக்கு | சனசமூக நிலையம் |
| 25.07.2003 | றெட்பானா | பிரதேச செயலகம் த.பொ.மே. நிறுவனம் |
| 29.07.2003 | உடையார்கட்டு தெற்கு | கமநல சேவை நிலையம் |
| 30.07.2003 | உடையார்கட்டு வடக்கு | சனசமூக நிலையம் |
| 31.07.2003 | சுதந்திரபுரம் சந்தி | சனசமூகநிலையம் |
| 01.08.2003 | சுதந்திரபுரம் வடக்கு | பாடசாலை அருகாமை |
| 04.08.2003 | வள்ளிபுனம் | அரசியல்துறை பிரதேச செயலகம் |
| 05.08.2003 | தேவிபுரம் | தேவிபுரம் சந்தி அருகாமை |
| 06.08.2003 | கைவேலி | பாடசாலை முன்பாக |
| 07.08.2003 | இரணைப்பாலை பொக்கணை | செந்தூரன் சிலையடி |
| 08.08.2003 | புதுக்குடியிருப்பு | கால்நடை வைத்தியர் நிலையம் |

த.பொ.மே.நிறுவனம்
முல்லை. மாவட்டசெயலகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்.

(3572)







இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.